# தமிழரசு

1.5.1994 ரூ.3




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# மகிழ்ச்சியான  திருநாள்!

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சிகாகோ நகரில் ஆண்டாண்டுக் காலமாகக் கொத்தடிமையாக உழைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சிந்தித்து ஒன்று கூடிப் போராடி, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பணி நேரமாக வரையறுக்கப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, உழைக்கும் வர்க்கம் அடிமை விலங்கை ஒடித்து நொறுக்கி விடுதலை பெற்று, வீறு கொண்டு, எழுந்த நாள் 1889 'மே' முதல் நாள் ஆகும். அந்நாள், ஆண்டுதோறும் 'மே' தினத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அழித்து, அன்று முழங்கிய உழைப்பவர்களின் உரிமைகீதம் தான் இன்று வாழ்வில் வசந்தமாகப் பல உரிமைகளைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது.

சாதி, மதம், இனப்பாகுபாடு இன்றி உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களும் ஒன்று கூடி தங்களது உரிமைக்காகப் போராடிப் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் மகிழ்ச்சியான திருநாள் இந்த 'மே' திருநாளாகும்.

- மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

## இந்த இதழில்


மே நாள் மேலான நாள்!..............................2

அண்ணல் அம்பேத்கர்
- மாண்புமிகு முதல்வர்..............................3

காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு மனிதாபிமானமிக்க இயக்கமாக்கப்படும்!
- மாண்புமிகு முதல்வர்..............................4

திறம்படச் செயலாற்றும் தீயணைப்புத் துறை
- மாண்புமிகு முதல்வர்..............................14

தமிழக அரசின் திட்டங்களுக்கு நபார்டு தலைவர் பாராட்டு!..............................15

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய, தொழிலதிபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அழைப்பு..............................16

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்:..............................17

காவல் துறையின் சாதனை..............................23

மே நாள், புரட்சித் திருநாள்! [கவிதை].......24

தலைசிறந்த தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் தகுந்த சூழ்நிலைகள்!..........26
- மாண்புமிகு முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர், காவல் துறைக்கு 37 ஜீப்களை வழங்கினார்..............................31

புதுப்பொலிவு பெறும் திருக்கோயில் திருக்குளங்கள்..............................33

டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்..............................37

நூல்நயம்..............................39

பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்..............................41

தொல்காப்பியத்தில் அறிவியல் கருத்துக்கள்..............................45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2025

சித்திரைத் திங்கள்: 18

மலர்:24 இதழ்:21

1.5.1994


அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல, உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

● எட்டாவது உலகத் தமிழ் மாநாடு வருகின்ற ஜனவரித் திங்களில் சிறப்புற நடைபெறுவதையொட்டி, இதழ்தோறும் ஒரு குறள் இங்கே இடம்பெறும்.





தொழிலாளி முதலாளி முறையே இருக்கக் கூடாது. வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது அடிமைத்தனம்.

- தந்தை பெரியார்

# மே நாள் மேலான நாள்!



ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக்கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள், சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுத்திட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!

பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். பாட்டாளிகள், வாழ்வுக்காக விடுதலைக்காக, உரிமைக்காக, மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது, மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது இந்தத் திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது.

பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின் இடையிலே ஒருநாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்கால் கணக்கைப் பார்க்கும் திருநாளே இந்த மே நாள்

- பேரறிஞர் அண்ணா





சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புக்களை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்! புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திருநாளாக மே முதல் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிற திருநாள் ஆகும்.

"உழைக்கும் மக்களே, ஒன்று சேர்ந்திடுவீர்! பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! உழைப்பவரே உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர்! புதிய சமதர்ம, சமத்துவ, சமுதாய அமைப்புக்கு முன்னோடும் சக்தியாகத் தலைமை தாங்கிடுவீர்!" என உழைக்கும் வர்க்கத்தை இருகரங்கூப்பி அழைக்கிறேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்



# அண்ணல் அம்பேத்கர்

## மாண்புமிகு முதல்வர்

அண்ணல் அம்பேத்கர், ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே மலரும் அதிசய மலர். ஒருவர் மாமேதையாக இருக்கலாம்; போராட்ட வீரராய் இருப்பதில்லை. போராட்ட வீரராய் இருக்கலாம்; பேரறிஞராய்த் திகழ்வ தில்லை. அம்பேத்கர் அவர்கள், போராட்ட வீரராய்த் திகழ்ந்த மாமேதை! அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரியாரைப் போன்ற போராட்ட வீரர்!

பேரறிஞர் அண்ணாவைப் போன்ற மாமேதை!

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போன்ற, ஒரு மனிதாபிமானி!

-எனவே தான், அவரைப் போற்றுவதில் வேறு யாரையும் விட நாம் முன் நிற்கின்றோம்.

அவருக்குச் செய்யப்படும் சிறப்பு, அறிவுக்குச் செய்யப்படும் சிறப்பு மட்டுமல்ல; புரட்சிக்கும், போராட்ட உணர்வுக்கும் செய்யப்படுகின்ற சிறப்பு; ஜனநாயகத் தத்துவத்துக்குச் செய்யப் படுகின்ற சிறப்பு; பலகோடித் தாழ்த்தப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு, நாம் செய்யும் சிறப்பு!

அந்தச் சிறப்பை, திராவிட இனத்தின் இலட்சிய விளக்கை, கைகளில் ஏந்தியிருக்கிற நான், இன்றைக்குச் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியாவில் தோன்றிய அரசியல் இயக்கங்கள், சமூக சீர்திருத்த விடுதலை இயக்கங்கள், எத்தனையோ இருந்தாலும், திராவிடப் பாரம் பரியத்திற்கு மட்டுமே - திராவிட இயக்கங்களுக்கு மட்டுமே - மாமேதை அம்பேத்கர் அவர்களின் கொள்கை, நெருக்கமானது.

''1924-இல், தந்தை பெரியார் வைக்கத்தில் நடத்திய, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்தான் என்னுள், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது'' என்று, 1927-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிரகடனம் செய்தார். ''அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக, இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, இதை நான் கூறியிருக்கிறேன். 1930-ஆம் ஆண்டு முதலே எனக்கு அவரைத் தெரியும்'' என்று, தமிழகம் தந்த தன்மானச் சிங்கம், தந்தை பெரியார் அவர்கள், அறிவுலக மேதை அம்பேத்கர் அவர்களுக்கு, மகுடம் சூட்டி மகிழ்ந்தார்.

வைர வரிகளாக விளங்கும், இந்த இரு வாசகங்களும், அண்ணல் அம்பேத்கர் யார், அவர்க்கும் நமக்கும் உள்ள இலட்சியப் பிணைப்பு என்ன, எப்படிப்பட்டது என்பதைக் காலமெல்லாம் நிலைத்து நின்று கூறப் போகிற, கருத்துக் கருவூலங்களாகும்.

தெற்கே தந்தை பெரியாரும், வடக்கே டாக்டர் அம்பேத்கரும், தோன்றியிராவிட்டால், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு நமது சமுதாயத்தில், மீட்சி என்பதே கிடைத்திருக்காது. அப்படிப்பட்ட மாபெரும் தலைவரான, விடுதலை வீரரான, சமூகப் போராட்ட சீலரான, இந்திய அரசியல் சட்டத்தின் சிற்பியான, இந்திய அரசின் முதல் சட்ட அமைச்சரான, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் புகழ், என்றென்றும் வாழ்க, வளர்க என்று வாழ்த்துகிறேன்.

**(-14.4.1993 அன்று, சென்னையில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**



# காவல்துறை நவீனமயமாக்கப்பட்டு மனிதாபிமானமிக்க இயக்கமாக்கப்படும்!

*தமிழகச் சட்டப்பேரவையில், **25.4.94** அன்று நடந்த, ஆயத்தீர்வை, காவல், தீயணைப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு*

## மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி

## டாக்டர் ஜெ. ஜெயலலிதா *அவர்கள் அளித்த பதிலுரை*

### காவல் துறை புதிய அறிவிப்புகள்:

காவல் துறை தற்போது எதிர்கொள்ளவேண்டிய பணிச் சுமையையும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சவால்களையும் ஆராய்ந்து பார்த்து, காவல் துறை வினைத்திட்பத்தோடும், தொழில் நுணுக்கத்தோடும் செயல்பட்டு, அகில இந்திய அளவில் தலைசிறந்த காவல் துறை என்பதை நிரூபித்து, மக்கள் பணியாற்ற இந்த அரசு பல நவீன திட்டங்களை வகுத்து, விரைந்து செயல்படுத்தி வருகிறது.

காவல் துறையின் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரிடையே பணி ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களுக்குத் தேவையான நவீன ஆயுதங்கள் உபகரணங்கள், தளவாடங்கள் ஆகியவைகளை வழங்கி, அவைகளை இயக்குவதற்குரிய பயிற்சிகளை அளிப்பதற்காகப் பல புதிய திட்டங்களை இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

(1) காவல் பணியில் தகவல் தொடர்பு Telecommunications எத்தகையதொரு முக்கியமான பணியை ஆற்றுகின்றது என்பதை அறிந்துள்ள நாங்கள், தகவல் தொடர்பினைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகிறோம். இந்த ஆண்டு திண்டுக்கல் அண்ணா மாவட்டம் அரங்காணல், நீலகிரி மாவட்டம் துருமுலா, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாஞ்சோலை, கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் தகவல் தொடர்பு திருப்பு நிலையங்கள் Repeater Stationகள் அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டும் இன்றி 1378 VHF Wireless Set கருவிகளும் 100 Walkie Talkie கருவிகளும் வழங்கப்படும்.

15 மாவட்டங்களுக்கு 2 கணிப்பொறிகள் மூலம் தகவல் அனுப்பும் கருவிகளும், Faxகருவிகளும் வழங்கப்படும். தகவல் தொடர்பினை மேம்படுத்த சென்னையை அடுத்துள்ள St.Thomas Mount, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில், மூன்று புதிய தகவல் தொடர்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். சேர்வராயன் மலையில் அமைந்துள்ள தகவல் தொடர்பு நிலையத்தில் பணிபுரியும் காவலர்களின் நலனுக்காகத் தங்கும் அறைகள் கட்டிக்கொடுக்கப்படும். தகவல் தொடர்புக்கென, இந்த நிதியாண்டில் இத்தனைப் பணிகளும் 5.43 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) இது கணிப்பொறிக் காலம் - Computer Age. காவல் துறையில் தேவையான செய்திகளைச் சேகரித்து, உடனுக்குடன் அவற்றை மற்ற பணிகளுக்கு உபயோகப்படுத்தும் வண்ணம் குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவுகளில் கணிப்பொறி அமைத்து நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. 26 காவல் மாவட்டங்களிலும் Crime Record Bureau என்று அழைக்கப்படும் குற்றப் பதிவுருப் பிரிவுகளில் கணிப்பொறி நிறுவப்படும். காவல் துறைப் பயிற்சிக் கல்லூரியில் கணிப்பொறிப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு தனிப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதையும், மதுரை, கோயம்புத்தூர், சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 4 காவல் நிலையங்களில் பரிசோதனைத் திட்டமாகக் கணிப்பொறிகள் அன்றாடப் பணியில் உபயோகப்படுத்தப்படும், குற்றப் புலனாய்வு முறை Computer மூலமாக "அங்குலி" என்ற புதிய கணிப்பொறி மூலமாக நவீனப்படுத்தப்படும் என்பதையும் இப்பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு 36 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி, Wireless Set மற்றும் ஜீப் ஆகிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. அந்த வகையில், தொலைபேசி இல்லாத 19 காவல் நிலையங்களுக்கு 6.30 இலட்சம் ரூபாய் செலவில் தொலைபேசி இணைப்புகள் உடனடியாக வழங்கி, தொலைபேசி இல்லாத காவல் நிலையங்களே இல்லை என்ற நிலையினை நாம் அடையப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.










(4) ஆவடி அருகே உள்ள வீராபுரத்தில் 68 எக்டேர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் செலவில் புதிய 'காவல் துறைப் பயிற்சிக் கழகம்' Police Academy ஒன்று நிறுவப்படும். பயங்கரவாத நடவடிக்கைகளையும், அதனோடு தொடர்புடைய பயங்கரவாத நிகழ்வுகளையும் முறியடிக்க, உரிய உயர்ந்த ரகப் பயிற்சியைக் காவல் துறையினருக்கு இந்தப் பயிற்சிக் கழகம் வழங்கும். முதல் கட்டமாக, வாகனம் ஓட்டும் பயிற்சிப் பள்ளி, வெடிகுண்டு கண்டுபிடித்தல் பயிற்சி மையம், மோப்ப நாய்கள் பயிற்சி மையம், பாதுகாப்புப் பணி அளிக்கும் சிறப்புப் பயிற்சிப் பிரிவு, நிர்வாகப் பயிற்சிப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(5) நீண்டு விரிந்து கிடக்கின்ற தமிழகத்தின் கடலோரப் பகுதியைப் பாதுகாக்க, அன்னியர்களின் ஊடுருவலைத் தடுக்க, கடலோரங்களில் அயல்நாடுகளுக்குக் கள்ளக் கடத்தலைத் தடுக்க, மீனவர்களின் நலன் காக்க, தமிழக அரசு 12 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறாத நிலையிலும், தமிழகத்தின் கடற்கரைப் பாதுகாப்பை மனதில் கொண்டு, இத்திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ், 1000 கிலோமீட்டர் நீளத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் சோதனைச் சாவடிகளும், ரோந்துப் பணிப் படைகளும் அமைக்கப்பட்டு, கடற்கரைப் பகுதியில் முழுவதுமாக ரோந்துப் பணி மேற்கொள்ளப்படும்.

இதற்கான ஒரு தனி கடற்கரைப் பாதுகாப்புப் படை Coastal Security Group உருவாக்கப்படும். இந்தப் புதிய பாதுகாப்புப் படையில் 300 காவலர்கள், 34 உதவி ஆய்வாளர்கள், 17 ஆய்வாளர்கள் 2 கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவர். அவர்களுக்குத் தேவையான Walkie Talkie கருவிகள், ஊர்திகள், சக்தி வாய்ந்த Binocularகள் ஆகியவை வழங்கப்படும். மேலும் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதற்காக மட்டும் 300

சைக்கிள்கள், 34 மோட்டார் சைக்கிள்கள், 23 ஜீப்புகள், 2 கார்கள் மற்றும் 4 பேருந்துகள் வழங்கப்படும். 3.48 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) பெருகிவரும் மக்கள் தொகை, மாறிவரும் பொருளாதாரச் சித்தாந்தங்கள், சென்னை மாநகரக் காவல் பணியினை மேலும் கடினமாக்கிக் கொண்டு வருகின்றன. எனவே, மாநகரக் காவல் துறையைச் சீரமைப்பதில் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்திவருகிறது. வளர்ந்துவரும் மாநகரத்தின் பல்வேறு காவல் துறைப் பணிகளின் அங்கங்களான போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு, குற்றப் புலனாய்வு, குற்ற நிகழ்வுகள் தடுப்பு மற்றும் பொது அமைதி பராமரித்தல் போன்றவைகளை மேம்படுத்த மாநகரக் காவல் பிரிவைச் சீரமைப்பதற்கு ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுத்தவுள்ளோம். முதலாவதாக, சென்னை மாநகரத்தை அடுத்துள்ள சில பகுதிகளை, சென்னைக் காவல் துறை ஆணையாளரின் கீழ் கொண்டு வருவதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படாத இந்தப் பணி எங்களது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், புதிதாக மாநகரக் காவல் துறையின் கீழ் இணைக்கப்பட வேண்டிய பகுதிகளை ஆராய்ந்து அறிவிப்பதற்கு, உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ) இவ்வாறு மாற்றி அமைக்கப்படும் மாநகரக் காவல் நிர்வாகத்தில் காவல் துறைத் துணைத் தலைவர் அந்தஸ்தில் இரண்டு இணை ஆணையாளர்கள் Joint Commissioner of Police நியமிக்கப்படுவார்கள் என்பதையும், சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப் புலனாய்வு ஆகிய பணிகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ) தற்போதுள்ள 3 சட்டம் ஒழுங்குப் பிரிவுகள் 4 பிரிவுகளாக மாற்றி அமைக்கப்படும்.

இ) பெருகிவரும் மாநகரப் போக்குவரத்துப் பிரச்சினையைச் சமாளிக்க மாநகரப் பிரிவை 2 பிரிவுகளாகப் பிரித்து மேலும் ஒரு புதிய துணை ஆணையாளர் பதவி புதிதாக உருவாக்கப்படும்.

ஈ) காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் நுண்ணறிதல் பிரிவில் தற்போது கூடுதல் துணை ஆணையாளர் அந்தஸ்தில் உள்ள பதவி, துணை ஆணையாளர் அந்தஸ்திற்கு உயர்த்தப்படும்.

உ) குற்றப் புலனாய்வுப் பிரிவில் சரக அளவில் கூடுதலாக இரண்டு உதவி ஆணையாளர் பதவிகள் உருவாக்கப்படும். இந்தப் பதவிகளை உருவாக்குவதில் தமிழக அரசிற்கு 28 இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமும், 9 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் தொடரும் செலவினமும் ஆகும்.

ஊ) சென்னை மாநகரத்திற்கு வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் சிறப்புப் படை Bomb Disposal Squad ஒன்று பிரத்யேகமாக 8 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்புப் பிரிவிற்கெனப் பிரத்யேகக் கருவிகள், ஆயுதங்கள், மோப்ப நாய்கள் ஆகியவைகள் வழங்கப்படும்.

எ) சென்னை மாநகரக் காவலுக்குத் தற்போது உபயோகத்தில் உள்ள லாரிகள், பேருந்துகள், ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்கள் மிகவும் பழையதாகவும், வேகமாகச் செல்வதற்குத் தோதற்றதாகவும் உள்ளன. கவனிப்பாரற்றுக் கிடந்த இத்தகைய 107 பழைய வாகனங்கள் கழிக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக 2.5 கோடி ரூபாய் செலவில் புதிய வாகனங்கள் சென்னை மாநகரக் காவலுக்கென வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(7)மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட 'அனைத்து மகளிர் காவல்



நிலையங்களில்' பணி புரிவதற்குக் கூடுதலாக 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5.51 கோடி ரூபாய் செலவில் தற்போது ஏற்கெனவே காலியாக உள்ள 1000 காவலர் பணியிடங்கள் உட்பட, புதிதாக உருவாக்கப்படும் 600 காவலர் பணியிடங்களுடன் சேர்த்து மொத்தம் 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

(8) பெண்களின் பிரத்யேகப் பிரச்சினைகளைச் சட்டபூர்வமான முறையில் தீர்த்துவைப்பதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, எங்கள் அரசு பெண்களுக்குச் சமுதாயத்தில் இழைக்கப்படும் வரதட்சிணை என்னும் சமுதாயக் கொடுமையை முழுமையாக அகற்ற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 'வரதட்சணை ஒழிப்புப் பிரிவு' ஒன்று காவல் துறையில் துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் தலைமையில் அமைக்கப்படும்.

நேரடியாகக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்படும் பெண் அலுவலர்கள் இந்தப் பிரிவின் தலைவர்களாகப் பணியாற்றுவார்கள் என்பதையும், அந்தப் பெண் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் நேரிடையாக மேற்பார்வை இடுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறிவரும் சமுதாயத்தின் வளர்ந்து வரும் தேவைகளை உணர்ந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வரும் நமது மாநில அரசு தேவையான பெண் துணைக் கண்காணிப்பாளர்களைத் தமிழ்நாடு தேர்வாணைக் குழுமத்தின் மூலமாகத் தேர்வு செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண் துணைக் கண்கண்காணிப்பாளர் எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் கண்காணிப்பதோடு வரதட்சணைக் கொடுமையை முழுமையாக அகற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

(9) இந்த ஆண்டு செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள என் பெயரில் அமைந்த நகரிலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்திலும், புதிதாக இரண்டு காவல் நிலையங்கள் தொடங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10) சென்னை மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா விமான நிலையம், காமராசர் விமான நிலையம் ஆகிய இரண்டு விமான நிலையங்களையும் இணைத்து ஒரு புதிய காவல் மாவட்டம், Separate Police District ஒன்றை உருவாக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய காவல் மாவட்டத்தில் ஒரு புதிய

காவல் நிலையத்தை உருவாக்கி அதற்குரிய அதிகாரங்களை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாவட்டம் அமைப்பதற்கு 60 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினமும் 14 இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(11) சென்னை மாநகரக் காவல் துறையில் பணி புரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக் காவல் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தில் 3000க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும், பல்வேறு புதிய வசதிகளையும் கொண்ட சென்னை காவலர் நகர் Police City ஒன்றினை உருவாக்குவது என்று இந்த அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல வகையான பலமாடிக் கட்டடங்கள் கொண்ட இந்தக் காவலர் நகரில் பள்ளிக் கூடம், சமூகக் கூடம், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சிக் கூடம், அஞ்சல் நிலையம், வங்கி, காவலர் கட்டுப்பாட்டு அறை போன்ற எல்லா வசதிகளையும் உருவாக்கித் தருவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு கட்டடங்களுக்கான வடிவமைப்புகள் தயாரிப்பதற்கு அனைத்து ஆயத்த நடவடிக்கைகளும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(12) ஒற்றாய்வுப் பிரிவில் Intelligence Special Branch பணியாற்றும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட அரசு வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்வதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அவர்களுக்கு என்று தனியாகக் குடியிருப்புகளைக் கட்டுவதற்குத் தேவையான அரசு நிலங்களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(13) சென்ற ஆண்டு அறிவிப்புகள் செய்யும்போது ஒவ்வொரு ஆண்டும் 25 உட்கோட்டங்கள் Sub-Divisions புதிதாக உருவாக்கப்படும் என்பதை நான் அறிவித்திருந்தாலும், இந்த ஆண்டு மேலும் 24 உட்கோட்டங்கள் சேர்த்து 49 புதிய உட்கோட்டங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் மூலமாகக் காவல் நிலையங்களை மேற்பார்வையிடும் பணி நன்முறையில் நடைபெறுவதோடு, பதவி உயர்வு பெறாமல் காவல் துறை ஆய்வாளர் அந்தஸ்தில் உள்ள தேக்க நிலையைத் தவிர்ப்பதற்கும் இது உதவும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(14) கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 3.32 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு புதிய காவல் சுருக்கெழுத்துக் கூடங்கள் Shorthand Bureaus இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(15) விடுதலைப் புலிகள் போன்ற போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் Q பிரிவின் வேலை பளுவைக் கருத்தில் கொண்டு ஒரு மேலாளர் மற்றும் 5 சிறப்பு உதவியாளர்களைப் புதிதாக நியமிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(16) சென்னைக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக, எழில்மிகு பல மாடிக் கட்டடத்தை, அதே இடத்தில் எழுப்புவதற்கு இந்த அரசு ஏற்கெனவே முடிவு எடுத்து, இயற்கையோடு இயைந்த

கட்டட அமைப்புக்கான வடிவமைப்புப் போட்டிகள் நடத்தப் பெற்று, சிறந்த கட்டுமான அமைப்பு தேர்வு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இத்திட்டம் இந்த ஆண்டு தொடங்குவதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(17) மதுரைச் சரகத்தின் காவல் துறைத் துணைத் தலைவர் DIG of Madurai Range அலுவலகக் கட்டடம் இந்த நிதியாண்டில் 17.50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(18) சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற பல காவல் நிலையங்களுக்கும் கழிப்பிட வசதி பல காலமாகச் செய்து தரப்படவில்லை. அதுபோன்ற, 61 காவல் நிலையங்களுக்கு இந்த நிதியாண்டில், 12 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடங்கள் கட்டித் தரப்படும்.

(19) அதேபோன்று, காவல் துறையின் அலுவலகங்களிலும், குடியிருப்புக் கட்டடங்களிலும், அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என்பதில், எங்கள் அரசு மிகுந்த கவனம் காட்டி வருகின்றது. 900 குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடங்களுக்குப் பழுது பார்க்கவும், மின் இணைப்பு மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தருவதற்கும் 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(20) தமிழகக் காவல் துறையின் பண் இசைக் குழு Police Band ஏற்கெனவே பிரசித்தி பெற்றதாக இருந்தாலும், மாவட்டம் மற்றும் மாநில அளவில் மிகச்சிறந்த குழுவாக அவற்றை மாற்றுவதற்குச் சிறப்புப் பயிற்சியும், நவீன இசைக் கருவிகளும், பணி யாளர்களுக்குப் புதிய சீருடைகளும், 74 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியின் சிறப்பை உயர்த்துவதற்காக, ஒவ்வொரு மாவட்ட




அளவிலும், உதவி ஆய்வாளர் அந்தஸ்தில் Band Master பதவி உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(21) காவல் துறைக்குச் சொந்தமான ஊர்திகளையும், வாகனங்களையும் பராமரிக்கத் தற்போது 2 காவல் துறைச் சரகங்களில் மட்டும் தொழிற் பட்டறைகள் உள்ளன. காவல் துறை வாகனங்களின் பராமரிப்பு சிறப்பான முறையில் மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக மீதமுள்ள எல்லாச் சரகங்களிலும் தொழிற் பட்டறைகள் அமைக்கப்படும். மருத்துவத் துறையில் தற்போது உள்ள தொழிற் பட்டறைக் கருவிகளும் தளவாடங்களும் காவல் துறைக்கு மாற்றம் செய்து தரப்படுவதோடு, கூடுதலாகத் தேவைப்படும் கருவிகள் இத்துறைக்கு வழங்கப்படும்.

(22) காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் அரசு மருத்துமனைகளில் மட்டுமன்றித் தனியார் மருத்துவமனைகளில்

உயர் மருத்துவச் சிகிச்சை பெற்றுக்கொள்ளக் காவலர் சிறப்பு மருத்துவ நலத்திட்டம் Medical Insurance Scheme ஒன்றை இந்த நிதியாண்டில் இருந்து எங்கள் அரசு செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, காவல் துறை இயக்குநர் கட்டுப் பாட்டில், உருவாக்கப்படும் சிறப்பு நிதிக்குத் தமிழக அரசு தனது பங்காக 50 இலட்சம் ரூபாயை வழங்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(23) அரசின் மற்ற துறைகளில் பணி புரிபவர்களுக்கு விடுமுறை கிடைப்பது போல, காவலர்கள் விடுமுறைகளை அனுபவிக்கின்ற வாய்ப்பு இன்றிப் பணியாற்றவேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு பணியாற்றும் காவலர்களுக்குக் கூடுதல் நேர ஊதியமாக, அதாவது. Extra Time Remuneration ஆக 10 ரூபாய் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியத்தை 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 70 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(24) 950 ரூபாய்க்கும் அதிகமாக அடிப்படைச் சம்பளம் பெறுகின்ற அரசு அலுவலர்களுக்கு மட்டுமே Moped வாங்குவதற்குக் கடன் வசதி வழங்கப்படும் என்கிற விதியைக் காவல் துறைக்கு மட்டும் தளர்த்தி, 825 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெறும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் Moped வாங்க அரசு கடன் வழங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(25) காவலர்களின் குடியிருப்புகளில் அனைவருக்குமாகச் சேர்த்து, ஒட்டு மொத்தமாக ஒரே மீட்டர் அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்கப்படுவதால், ஒவ்வொரு தடவையும் அதிகமாக மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று காவலர்களின் குடும்பங்கள் பல காலமாகக் கோரி வருகின்றார்கள். அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு காவலரும் அவரவர் தனித்தனியே பயன்படுத்தும் மின் அளவுக்கான குறைந்தபட்ச மின் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய முறை அமல் செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 13,932 காவலர்களின் குடும்பங்கள் பயன்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(26) போக்குவரத்துக் காவல் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் அனுதினமும் சாலைகளில் நின்றுகொண்டு, மிக இக்கட்டான சூழ்நிலைகளிலும் பணிபுரிவதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் சிறப்பு ஊதியம், இந்த ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்குத் தற்போது வழங்கப்படும் சிறப்பு ஊதியம் 3 மடங்காகவும், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணைக் கண் காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊதியம் 2 மடங்காகவும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு 15.40 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(27) காவல் பயிற்சி நிலையங்களில் திறமைமிக்கவர்களின் சேவை கிடைக்குமாறு செய்யவும், அவர்களின் பணி ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும். தற்போது பயிற்சிப் பள்ளிகளில் பணி புரியும் அலுவலர்களுக்கு, அவர்களுடைய அடிப்படை ஊதியத்தில் 15 சதவீதம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(28) கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஆயுதப் படை பிரிவைச் சார்ந்த கூடுதல் கண்காணிப்பாளர் பதவிகள், துணை ஆணையாளர் பதவிகளாக உயர்த்தப்படும்.

(29) சென்னை மாநகரக் காவல் பிரிவில், மோட்டார் வாகனப் பிரிவைக் கண்காணிக்கத் துணை ஆணையாளர் அந்தஸ்தில் ஒரு புதிய பதவி தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(30) 7 காவல் துறை சரக அலுவலகங்களில், நிர்வாக நலன் கருதி, காவல் துறைத் துணைத் தலைவர்களுக்கு உதவி புரிவதற்காக நேர்முக உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பெரியார், நீலகிரி, விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை- சம்புவராயர், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்-அண்ணா ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பாளர் பதவிகள் நேர்முக உதவியாளர் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்பதையும், இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 11.20 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(31) காவல் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று மாவட்டங்களில் பணி புரியும் 1,200 அதிரடிப் படையைச் சார்ந்த காவலர்களின் கடின உழைப்பு, துப்பாக்கி சுடும் திறன், கட்டமைப்பான உடல் திறன் ஆகியவற்றைத் தொடர்ந்து பராமரிப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஒரு சிறப்புத் தேர்வை நிகழ்த்தி, அதில் தேர்வு பெறுபவர்களுக்கு 500 ரூபாய் மட்டும் சிறப்பு ஊக்கத் தொகையாக ஒரே ஒரு முறை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியத்தில் நான் இப்போது வெளியிட்ட புதிய அறிவிப்புகளால் அரசுக்கு 26 கோடி ரூபாய் மொத்த செல்வாகும் என்பதையும், இதில் ஒவ்வொரு ஆண்டும் தொடர் இனச் செலவாக 14 கோடி ரூபாய் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்புகளின் வாயிலாக, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடங்கள் 2,017 ஆகும். காவலர் பதவியிலிருந்து காவல் துறைத் துணைத் தலைவர் பதவி வரை கூடுதலாகப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**பெண்களின் அணிகள்**

**அடக்கம், பொறுமை, புத்திக்கூர்மை, திறமை, தியாகம், பிறர்நலம் பேணுதல், எளிமை, அழகு இவையே பெண்களின் மொத்த வடிவம்.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு, மனிதாபிமானமிக்க ஓர் இயக்கமாக மாற்றும் முயற்சிக்கு நாங்கள் இந்த ஆண்டு எடுத்திருக்கும் பல்வேறு கொள்கை முடிவுகள் உறுதுணையாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**முடிவுரை:**

எங்கள் அரசைப் பொறுத்தவரையில், எந்தத் தொய்வும் இன்றி தொடர்ந்து மக்கள் நலனுக்காக, மக்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காகச் செயல்பட வேண்டும் என்கின்ற கொள்கையில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம். எத்தனைப் பிரச்சினைகள், எத்தனை இடர்ப்பாடுகள், எத்தனை இன்னல்கள் ஏற்பட்டாலும், அவற்றையெல்லாம் எதிர்கொண்டு சந்திக்கின்ற துணிவும் நெஞ்சுரமும் எங்களுக்கு நிறையவே இருக்கிறது. எனவே, ஒவ்வொரு ஆண்டும், இன்னும் நன்றாகச் செயல்பட வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம்.

காவல், தீயணைப்பு, மாநில ஆயத்தீர்வை ஆகிய மூன்று முக்கியமான துறைகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்த கருத்துக்கள் அனைத்தையும், மக்கள் நலம் போற்றும் எங்கள் அரசு, கவனத்தில் கொண்டு, தேவை எழுகின்ற இனங்களில், நிதிநிலைக்கேற்ப, அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் என்பதை, உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, இந்தத் துறைகளில், 'குறைகள்' எனக் கருதி, கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்துமே, உடனடியாக அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றை உடன்

களைவதற்கு, உரிய நடவடிக்கைகள் அனைத்தும், சற்றும் தயக்கமின்றி எடுக்கப்படும் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நேரத்தில் கள்ளச் சாராயம் முற்றிலுமாக அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தொகுதிகளான பார்கூர் மற்றும் வால்பாறை பற்றி அறிவிக்கும்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில் மற்ற பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களும் இதே பேரவையில் பாராட்டினைப் பெற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றோடு ஒன்று தொடர்புள்ள, இந்த மூன்று துறைகளுமே, வளர்ச்சியுறும் சமுதாயத்தில், அவை எவ்வாறு இயக்கப்படுகின்றனவோ, அதற்கேற்பவே, விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. இந்தக் கருத்தை எங்களது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

### தொழில்



*இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!*
*யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!*
*கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!*
*கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!*
*அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்*
*ஆயிரந் தொழில் செய்திடு வீரே!*

- மாக்கவி பாரதி

சட்டம், ஒழுங்கு, மிக நல்ல முறையில் பராமரிக்கப்படும் மாநிலம் தமிழகம். எவ்வகையான இயற்கையின் சீற்றங்கள் ஏற்படினும், அவை உடன் சமாளிக்கப்பட்டு, நிலைமை சீராக்கப்படும் மாநிலம் தமிழகம். மதுவிலக்குத் தொடர்பான குற்றங்கள் மிகக் குறைவாகவே நிகழ்கின்ற மாநிலம் தமிழகம் என்ற முப்பெரும் சிறப்புக்களை, எங்களது அரசு பதவி ஏற்ற பின்னர், ஏறக்குறைய கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பெற்று வரும் 'தமிழகம்' இத்தனிப் பெரும் சிறப்புக்களை என்றென்றும் பெற்றுத் திகழும்வண்ணம், எங்களது அரசு செயல்படும் என்ற உறுதியை எனது அன்புக்குரிய தமிழகப் பெருமக்களுக்கு, இந்த மாமன்றத்தின் வாயிலாக வழங்கிக் கொள்வதில், நான் மிக்க மனநிறைவு அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது எடுத்துரைத்த கருத்துக்களுக்கும், அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் வழங்கிய பதிலுரையில் பெரும்பாலும் விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று நம்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய சில கருத்துக்களுக்கு, காலத்தின் அருமை கருதி, நான் எனது பதிலுரையில் விளக்கங்களை அளித்திராவிட்டாலும், அவைக்குறிப்பில் பதிவாகியுள்ள அவை அனைத்தையுமே, எங்கள் அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, காவல்துறை, மாநில ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளை, நிறை வேற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



# திறம்படச் செயலாற்றும் தீயணைப்புத் துறை

**– மாண்புமிகு முதல்வர்**

வளரும் சமுதாயத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் அதிகரித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்குப் புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்; பணியாளர்களின் அமைப்புகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்; பணியாளர்களின் பணி ஆர்வத்தை அதிகப்படுத்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதை எங்கள் அரசு நன்கு உணர்ந்து, கடுமையான நிதி நெருக்கடியிலும், நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில், இந்த அரசின் சில முடிவுகளை எடுத்துரைக்க விழைகின்றேன்.

தற்போது தீயணைப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தில் 'தீ கட்டுப்பாட்டு அறை, Control Room இரண்டு பணி முறைகளில் மட்டும் இயங்கி வருவதை, மூன்று பணி முறைகளாக Three Shift System ஆக மாற்றியமைக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. மூன்று பணி முறைகள் முறையே செயல்படுத்த, கூடுதலாகத் தேவைப்படுகின்ற ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலர், 4 முன்னணித் தீயணைப்போர், 3 தீயணைப்போர் ஆகியோர் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையில் பணி புரியும் 265 பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதி அரசாங்கத்தால் செய்து தரப்பட்டுள்ளது. ஏனைய பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்று சென்ற வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் சென்னை நகரம், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் கிட்டத்தட்ட 100 குடியிருப்புகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்குடியிருப்புகளைத் தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் HUDCO நிதி உதவியுடன் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் அமைந்துள்ள 222 தீயணைப்பு நிலையங்களில், 104 தீயணைப்பு நிலையங்கள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் நாமக்கல், செய்யாறு, ஆலங்குடி, கோவில்பட்டி மற்றும் நெல்லிக்குப்பம் ஆகிய 5 இடங்களில் தீயணைப்பு நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களைவிட, நமது தமிழ்நாடு தீயணைப்புத் துறை திறம்படச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## தமிழக அரசின் திட்டங்களுக்கு 'நபார்டு' தலைவர் பாராட்டு

நபார்டு' வங்கியின் தலைவர் திரு பி. கோட்டையா, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை 6.4.1994 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் நாட்டில் விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடு குறித்து விரிவாகப் பேசப்பட்டது. கிராமப் புறங்களில் கடன் வசதிகளை மீண்டும் நல்ல முறையில் கொண்டு வருவதிலும், விவசாயிகள், நெச வாளர்கள் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்கள் ஆகியோருக்குக் கடன் வழங்குவதிலும் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டி ருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழக விவசாயிகளுக்குச் சுலப மான முறையில் கடன் வசதி கிடைக்கச் செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நபார்டு வங்கியின் தலைவர் வெகுவாகப் பாராட்டி னார். 1994-95-ஆம் ஆண்டுக்கு மாநிலத்தின் ஆண்டுக் கடன் வசதித் திட்டம், ரூ.3,000 கோடிக்கு நபார்டு வங்கி முழு ஒத்துழைப்பு நல்கும் என திரு. கோட்டையா அவர்கள் உறுதியளித்தார்.

1994-95-இல் ஒரு இலட்சம் மகளி ருக்குச் சுயவேலைவாய்ப்பு அளிக் கும் திட்டத்துக்கு நபார்டு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். தமிழ் நாட்டில் தருமபுரி மாவட்டத்திலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் பெண்கள் சுயதொழில் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நபார்டு தலைவர் வெகுவாகப் பாராட்டினார். விவசாயம், விவ சாயம் சாராத துறைகளில் கிராமப் புற வேலைவாய்ப்புக்கான இந்தத் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக இவர் உறுதி அளித்தார்.

மாநிலத்தில் தொடக்க வங்கி களை உறுதிப்படுத்த நீண்ட காலச் செயல்முறை நிதியிலிருந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதரவு கோரினார். இந்தக் கோரிக்கைக்கு முதலிடம் கொடுத்து பரிசீலிப்பதாக நபார்டு தலைவர் அவர்கள் கூறினார்.

மாநில நெசவாளர்கள் நிலையை உயர்த்த எடுக்கப்பட்டுள்ள சிறப் பான நடவடிக்கைகளை, மாண்பு மிகு முதல்வர் அவர்கள் விளக் கினார். மாநிலத்திலுள்ள நெச வாளர்கள் பயன்பெறும் வகையில் 1993-94-இல் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு ரூ.54.18 கோடிக்கு, கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி வழங்கப்பட்டதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறினார். நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டத் துக்கு நபார்டு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டுமென, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ஒருங்கிணைந்த கடற்கரையோர மேம்பாட்டுத் திட்டத்துக்கு நபார்டு வங்கி நிதிஉதவி அளிக்க வேண்டு மென மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சந்திப்பின்போது கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்தக் கோரிக்கை, உரிய முறையில் கவனிக்கப்படும் என்று நபார்டு தலைவர் அவர்கள் உறுதி அளித் தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பால்க் விரிகுடா பகுதியில் வசிக்கும் மீனவர்கள் மறுவாழ்வுத் திட்டத் துக்கு ஆதரவு அளிக்க வேண்டு மெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இந்தத் திட்டத்துக்கு முழு ஒத்து ழைப்புத் தருவதாக விவசாயம், கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கியின் (நபார்டு) தலைவர் அவர்கள் உறுதி கூறினார்.



# தமிழ்நாட்டில் முதலீடு செய்ய, தொழிலதிபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அழைப்பு

**த**மிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்து இந்திய வர்த்தகத் தொழில் சபை கூட்டமைப்புத் தலைவர் திரு கோவிந்த் ஹர் சிங்கானியா தலைமையில் 9 பேர் அடங்கிய குழு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை 7.4.94 அன்று சென்னையில் சந்தித்து ஒரு மணி நேரம் பேசினார்கள்.

சென்னைத் தொழில் வர்த்தகச் சபையின் தலைவர் திரு என். சீனிவாசன், துணைத் தலைவர் திரு என். லட்சுமணன், செயலர் திரு என். கண்ணன் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை மற்ற மாநிலங்களில் நடத்திய சிறப்பான சாலைக் கண்காட்சி மூலம் விளம்பரப்படுத்தியதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தக் குழு பாராட்டியது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்கத் தேவையான அடிப்படை வசதிகள், அமைதியான தொழில் உறவு, சூழல் மற்றும் ஏராளமான தொழில்நுட்ப நிபுணர்கள் இருப்பதைத் தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திய வர்த்தகத் தொழில் சங்கத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

புதிய தொழில் தொழில் தொடங்கத் தேவையான அடிப்படை வசதிகளில் குறிப்பாக மின்சாரம் கிடைப்பதில் தமிழகம் அதிக கவனம் செலுத்துகிறது என்பதைக் குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். சாலைகள் மற்றும் துறைமுக மேம்பாடு போன்ற அடிப்படை வசதிகள் மேம்பாட்டில் தனியார் துறையினர் அதிகமாகப் பங்கேற்பதை வரவேற்பதாக மாண்புமிகு முதல்வர் குறிப்பிட்டார்.

மின்சாரத்தைப் பொருத்தமட்டில், அடுத்த ஆண்டில் தமிழ்நாடு மின் இணைப்பில் 1000 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகச் சேர்க்கப்படும். மேலும், அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளில் சுமார் 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, தமிழகம் மின்துறையில் உபரி நிலையை அடைந்துவிடும்.

சோளிங்கநல்லூர் அருகே உருவாக்கப்படும் சென்னைத் தொழில் பூங்கா, சர்வதேச அளவுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என்பதைக் குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். சென்னையில் நிரந்தர வர்த்தகக் கண்காட்சி வளாகம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இந்தக் கண்காட்சி வளாகம் தனியார் துறையின் முழு ஒத்துழைப்புடன் உருவாக்கப்படும் என்பதையும் குழுவினரிடம் உறுதியளித்தார்.

தென்னக எரிவாயு இணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதில் குழு ஆர்வமாக இருக்கிறது. தமிழகத்துக்குத் தேவையான எரிவாயு குறித்து தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, குழாய் இணைப்புக்கு உரிய குழாய்ப் பதிப்பு பற்றி ஆலோசனைத் தெரிவிக்கும் என மாண்புமிகு முதல்வர் கூறினார்.

மலேசியாவிலிருந்து எரிவாயு இறக்குமதி வாய்ப்பு குறித்தும் பரிசீலிக்கலாம் என மாண்புமிகு முதல்வர் கருத்து தெரிவித்தார். தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் தொழில் அதிபர்களுக்குத் தமிழக அரசு முழு ஒத்துழைப்பையும் அனைத்து உதவிகளையும் வழங்கும் என குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி அளித்தார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் சென்ற மாதம் தொடங்கிய நாள்முதல் (16.3.94), 20.4.94-ஆம் நாள் வரை மாண்புமிகு முதல்வர் முதலாக- அமைச்சர் பெருமக்கள் வரை சட்டப் பேரவையில் தத்தம் துறை குறித்து அறிவித்த சில முக்கிய அறிவிப்புகளும், அரசின் ஆக்கப்பணி களும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

★ ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குத் தென்னங்கன்று வளர்க்கக் கொடுக்கப்படுவது போல்- தென்னை வளராத நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்குத் தேக்கு அல்லது ஈட்டி மரக்கன்றுகள் வழங்க அரசு ஆவன செய்யும்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத் துறை அமைச்சர்)

★ தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை எப் போதும் சமநிலையானதாக இருந்து வருகிறது; சமச்சீரான பொருளாதாரக் கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகிறோம்; எவ்வளவு நிதி நெருக் கடி ஏற்பட்டபோதிலும் நாம் எப்போதும் அதிகப் பற்று (ஓவர் டிராஃப்ட்) வாங்கியதே இல்லை.

—டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
(நிதியமைச்சர்)

★ மூடப்பட்டுள்ள 56 கிராமிய நூற்பு மையங் களை உடனடியாக நவீனப்படுத்தித் திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி
(கதர்-கிராமத் தொழில் துறை அமைச்சர்)

★ 'டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி' என்ற பெயரில் மறுவாழ்வு நிதியொன்றினை ஏற்படுத்தி மானிய மாக ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது அரசு. நலிந்த தொழிற்சாலை ஆட்குறைப்புக் காரண மாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மறு வாழ்வு போன்றவைகளுக்கு மற்றொரு மறுவாழ்வு நிதி ஏற்படுத்துவது குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.

—திரு. அ.மா. பரமசிவன்
(தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)

★ பெரிய பாளையத்தம்மன் அருள்மிகு பவானி யம்மன் திருக்கோயிலில், பக்தர்களுக்குத் தேவை யான வசதிகளைச் செய்து தரும் பொருட்டு ரூ.71 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைகள் நடந்து வருகின்றன; ஆறுமாத காலத் திற்குள் இந்தப் பணிகள் நிறைவுறும்.

—திரு. டி.வி. நடேசன் பால்ராஜ்
(இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்)

★ தமிழ்நாடு முழுவதும் 5 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவிகளுக்குப் பள்ளிக்கூடங்களில் சுகாதார முகாம்கள் நடத்தப் படும். மருத்துவமனைகளுக்கு மருந்து விநியோக முறை சீராக இருக்க வேண்டும் என்பதற்காக மருந்து வாரியம் முதல்வர் அவர்களால் அமைக்கப் பட்டுள்ளது; இது சென்னையைத் தலைமை இட



மாகக் கொண்டு இயங்கும். நடப்பு ஆண்டில் 1.34 கோடி குழந்தைகளுக்கு மருத்துவ உதவித் திட்டம் செயல்படுத்தப்படும்.

—திரு. எஸ். முத்துசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

★ கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு இம்மாதம் (மார்ச்) முதல் தேதியிலிருந்து ரூ.600 என்றிருந்த சம்பளம் ரூ.750 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

—திரு. கா.ப. பட்டாபராமன்
(கூட்டுறவுத்துறை அமைச்சர்)

★ சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று நகராட்சிகளையும் மாநகராட்சிகள் ஆக்கிட - அரசு கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

—திரு. டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில், நிலச் சீர்திருத்த வழிப்படி, தனியார்களிடமிருந்து 470 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. இவற்றில் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களின் வழக்கு முடிந்ததும், உபரி நிலம் எடுக்கப்பட்டு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். நிலத்திமிங்கிலங்களின் பினாமி நிலங்களைக் கைப்பற்றி ஏழைகளுக்கு வழங்க 3.10.1991-இல் அரசு நிறைவேற்றிய சட்ட முன் வடிவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

**★ நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள எல்லாக் கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. அதேபோல் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுகள், தென்னங்கீற்று, விறகு ஆகியவற்றின் மீதுபோடப்பட்டுள்ள விற்பனை வரிகளும் நீக்கப்படுகின்றன.**

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா**

★ தமிழ்நாட்டில் காளான் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி, அதிகக் காளான் உற்பத்திக்குக் கடனுதவிகள் வழங்க, இந்த ஆண்டுக்கு ரூ.69 இலட்சத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத்துறை அமைச்சர்)

★ பொதுமக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் நிறைந்த போக்குவரத்து வசதியினைத் திறமையோடும், தொண்டுள்ளத்துடனும் செய்து கொடுப்பது 19 போக்குவரத்துக் கழகங்களின் குறிக்கோளாகும். 1993-94-ஆம் நிதியாண்டில் ஜனவரி மாதம் வரை ரூ.69.22 கோடி செலவில் 1,125 புதிய பஸ்களைப் போக்குவரத்துக் கழகங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன. இதில் பழைய பஸ்களுக்குப் பதிலாகப் புதிய பஸ்களை மாற்றிய வகையில் 1011 பஸ்களும், புதிய வழித்தடங்களில் இயக்கப்பட்ட 114 பஸ்களும் அடங்கும். புதிய பஸ்களை அறிமுகப்படுத்தியதன் பயனாக 117 கிராமங்களில் உள்ள சுமார் 1.20 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். அனைத்துக் கோயில்களையும் ஒன்றாக இணைத்து பஸ்களைவிட அரசு பரிசீலித்து வருகிறது.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவதில் முன்னுரிமைதர வேண்டும் என்ற முதல்வர் உத்தரவையடுத்து 1992-93-ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 537 வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், ஜெர்மன் வங்கி உதவியோடு மேலும் 110 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படும்.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

**★ தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் ஒரு சவரனுக்கு ரூ.2,400 கடன் வழங்கப்படுகிறது.**

**—திரு. கா.ப. பட்டாபிராமன்**
**(கூட்டுறவுத்துறை அமைச்சர்)**

★ முதல்வர் ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தில் இந்த ஆண்டு புதிதாக 20 சொகுசு குளிர்சாதன பஸ்கள் கழிப்பிட வசதியுடன் கட்டி விடப்படும். 15 ஆண்டுகள் விபத்துகளே இல்லாமல் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால், அந்த ஓட்டுநருக்கும் - ஆண்டு முழுவதும் உயர்ந்தபட்ச வசூல் தொகை ஈட்டிய நடத்துநர்களுக்கும் டாக்டர் புரட்சித்தலைவி விருது வழங்கப்படும்.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ தமிழ்நாட்டில் பத்திரப் பதிவுத் துறையில் முதல்வர் மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளினால் - இந்த ஆண்டு பத்திரப் பதிவுத் துறை ரூ.470 கோடி என்ற இலக்கை மீறி, ரூ.489

**மனம்**



◉ மனத்தை அளக்க மனமே கருவி. கூர்ந்து கவனிக்கும் சக்தி நம்மிடம் உண்டு. அதை உட்புறமாகத் திருப்பினால் மனத்தைப் பற்றிய விவரங்கள் நமக்குப் புலனாகும் மனத்தின் ஆற்றல்கள் சிதறிப்போன ஒளிக் கிரணங்கள் போன்றவை. அக்கிரணங்களை ஒன்றுபடச் செய்தால், சுடரொளி கிடைக்கும். இதுவே அறிவு கிடைக்க ஒரே வழி



## மேதினி விழித்தது!

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங் காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப் பட்டனர். ஆண்டை-அடிமை, உயர்ந்தவன்-தாழ்ந் தவன், மதகுரு-பக்தன், மிராசு-உழவன், பிரபு-பணியாள், முதலாளி-தொழிலாளி இவர்களி டையே ஏற்பட்ட வார்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன் றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்-முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவரு டைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப் பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத் தைப் புலியுள்ளமாக்கியது; கூசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது!

---

கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது. திருச்சி மாவட்டம், செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆகியவை இரண்டாகப் பிரிக்கப்படும்; இதற்காக ஓர் உயர்மட்டக் குழுவை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப் பித்துள்ளார்.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற புரட்சித் தலைவி அரசின் குறிக்கோளை அடைவதில் அரசுத் துறை மற்றும் தனியார் துறையின் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டு, அதற்குத் தேவை யான எல்லா நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப் படும்; 1994-95-ஆம் ஆண்டில் பொதுத்துறை உதவியால் அபிவிருத்தி செய்யப்படும் வீடுகட்டும் திட்டத்திற்கான முதலீட்டினை ரூ.425.81 கோடிக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ போக்குவரத்துத் துறையின் பணிகளை மேம் படுத்துவதற்காக ரூ.81.23 இலட்சம் அளவிலான, 1994-95-ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டங்களுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அரசு அனுமதியளித்துள்ளது.

சென்னையில் 69 பெண்களுக்கு மோட்டார் டாக்சி ஓட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 30 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 4 ஆயிரத்து 596 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1994-95-இல் ரூ.7 கோடியே 59 இலட்சம் செலவில் 640 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ தனியார் வசம், பல் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி கொடுப்பதில்லை என்று அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறது.

—திரு. எஸ். முத்துசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

★ வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிக்க ரூ.27 இலட்சத்தைச் செலவிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி யிருக்கிறார்.

—திரு. மு. தென்னவன்
(செய்தித்துறை அமைச்சர்)

★ தரமணியிலிருந்து வில்லிவாக்கம் வரை துரித ரயில் திட்டத்தை விரிவாக்கும் பணி அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதைப் பாதாள ரயில் திட்டம் போல மாற்றுவது குறித்து அரசு தீவிரப் பரிசோதனை செய்து வருகிறது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ சென்னை-குமரி கடற்கரைச் சாலை அமைப்புப் பணி விரைவில் பூர்த்தியடையும். இரு வழிப் பாதை கொண்ட தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிப் பாதைகளாக்கப்படும். சென்னைக்கு, அடுத்த ஆண்டே கிருஷ்ணா நதிநீர் கிடைக்கும். அதற்கான ஏற்பாடுகள் முடியும் தருவாயில் உள்ளன. கிராமச் சாலைகள் மேம்படுத்தப்படும். இந்த ஆண்டும் ஜூன் 12-ஆம் நாள் மேட்டூர் அணை திறந்து விடப்படும்.

—திரு. எஸ். கண்ணப்பன்
(பொதுப்பணித்துறை அமைச்சர்)

★ தமிழக அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் 3 கப்பல்கள் சொந்தமாக உள்ளன. மேலும் 13 கப்பல்கள் வாடகைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற் றின் மூலமாகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்படுகிறது. அனல்மின் நிலையங்களுக்குக் கடல் வழியாக எடுத்து வரப் படும் நிலக்கரியின் அளவு எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்பதைக் கவனத்தில் கொண்டு புதிதாக 3 சரக்குக் கப்பல்கள் வாங்கப்படும்.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)



# நம் கடமை!

நம்முடைய உடலும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

மூதறிஞர் இராஜாஜி

★ இந்த நிதியாண்டில், நலிவடைந்த ஆலைகளை நவீனப்படுத்த ரூ.3.79 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆலைகளின் மேம்பாட்டிற்காக அரசின் பங்குத்தொகையாக ரூ.5 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தாமே முன்வந்து ஓய்வுபெறும் வசதிக்காக ரூ.4.75 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. உரிய பருவத்தில், தேவையான அளவிற்குக் குறைந்த விலையில் வாங்கும் பொருட்டுக் கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான நிதி ஆதாரமாக ரூ.2 கோடி அளிக்க முதல்வர் ஆணையிட்டிருக்கிறார்.

—திரு. இ. மதுசூதனன்
(கைத்தறித்துறை அமைச்சர்)

★ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில், பிள்ளைவாயில் என்ற ஊரில் ரூ.30.90 இலட்சம் செலவில் 150 நரிக்குறவர்களுக்கு வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

—திரு. டி. ஜெயக்குமார்
(மீன்வளத்துறை அமைச்சர்)

★ அடித்தள மக்களின் இதயமாக, இதய வீணையாக அண்ணல் அம்பேத்கர் விளங்குகிறார்; இனி, அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா, டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு சார்பில் கொண்டாடப்படும்.

—திரு. மு. தென்னவன்
(செய்தித்துறை அமைச்சர்)

★ சென்னையில் உச்சநீதி மன்ற ஆயம் ஒன்று அமையும் வரையில் இந்த அரசு விடாது முயற்சிகள் மேற்கொள்ளும். அண்மைக்காலங்களில் இறுதி நீதி வழங்குதலில் பெரும் செலவு வாய்ப்பதுடன் மிகுந்த காலதாமதமும் ஏற்படுகிறது. விரைவான முறையிலும், குறைந்த செலவினத்திலும் ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைப்பதற்குரிய வழிவகைகளை இவ்வரசு கண்டறியும்.

—திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி
(சட்டத்துறை அமைச்சர்)

**★ சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு நிர்வாக முறைக்கு வகை செய்வதோடு - இவ்வமைப்புகளில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியில் 3-இல் ஒரு பங்கு இடம் மகளிருக்கு ஒதுக்கவும் அரிசனங்கள் மற்றும் பழங்குடியினருக்கு அங்குள்ள மக்கள் தொகைக்கேற்ப இடங்களை ஒதுக்கவும் புதிய பஞ்சாயத்துச் சட்டம் வகைசெய்யும். புதிய ஊராட்சி அமைப்புகளின் பதவிக்காலம் 5-ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது.**

— திரு டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ தென் சென்னையில் அறிவியல் நகரம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. கல்லூரி மாணவர்கள் ஒரு பட்ட வகுப்பில் (முதுநிலை அல்லது இளநிலை) படித்துக் கொண்டிருக்கும் போதே மாலை நேரத்தில் மேலும் ஒரு பட்ட அல்லது பட்டய வகுப்புப் படிக்க அனுமதிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெயரில் திறந்தவெளி பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படும். பின்தங்கிய மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, முதல்வர் பெயரில் சீர்மிகு பள்ளி என்ற பெயரில் மாதிரிப் பள்ளி அமைக்கப்படும்.

—திரு. கே. பொன்னுசாமி
(கல்வித்துறை அமைச்சர்)

**★ விடுதலைப்புலிகள் இயக்கத்தின்மீது மத்திய அரசு விதித்துள்ள தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை 20.4.94 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் மொழிந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத் தடையை ஏன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்பதற்கான காரண காரியங்கள் அத்தீர்மானத்தில் விவரிக்கப்பட்டிருந்தன.**

**★ "அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் விளைவாக நாடு முழுவதும் இனக்கலவரம் ஏற்பட்டபோது, தமிழ்நாடு மட்டும் விதிவிலக்காகப் பொது அமைதி காத்தது. இருப்பினும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வதந்திகளாகப் பரப்பி உணர்வுகளைத் தூண்டி வன்முறைக்கு வித்திட்டு, மக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதை அனைவரும் கண்டிக்க வேண்டும்" என்று 20.4.94 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.**

★ தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாநகராட்சிகள் ஏற்கெனவே உள்ளன. இதுவரை நகராட்சிகளாக இருந்த திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 நகரங்களும் மாநகராட்சிகளாக ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் மாற்றப்பட்டு உள்ளன.

—திரு. டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ சென்னை மாநகரில் ஏறத்தாழ 24,000 குடும்பங்கள் நடைபாதையில் வசித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நடைபாதையில் வசிக்கும் அந்தக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.261.80 இலட்சம் செலவில் திட்டம் செயற் படுத்தப்பட உள்ளது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ சென்னை அருகே ரூ.10 கோடி செலவில் கடல் நீரிலேயே உலவும் கடல்வாழ் உயிரியல் பூங்கா ஒன்று அமைக்க முதல்வர் திட்டமிட்டு உள்ளார். தனியாருடன் சேர்ந்து கூட்டுத்துறையில் இப்பூங்கா அமைக்கப்படும்.

—திரு. டி. ஜெயக்குமார்
(மீன்வளத்துறை அமைச்சர்)

★ மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் நில வரியைத் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவிட்டு உள்ளது. குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய அரசு கடனாக மாற்றவும் அரசு அறிவித்து உள்ளது.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ எம்.ஜி.ஆர். நெல் அதிக விளைச்சல் செய்யும் விவசாயிகளுக்கு ஜெயலலிதா பொற்பதக்கம் 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஆண்டுதோறும் வழங்கப்படும். விவசாயிகளுக்கு டீசல் என் ஜின்கள் வாங்க 4 ஆயிரம் ரூபாய் மானியம் வீதம் 2 கோடி ரூபாய் வழங்கப்படும். கந்தர் கோட்டை யில் 4 கோடி ரூபாய் செலவில் முந்திரித் தோட்டம் அமைக்கப்படும். பண்ணைக் கழிவு களை உயிரின உரமாக்கும் பயிற்சி ரூ.30 இலட்சம் செலவில் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும். 70 ஆயிரம் சிறு-குறு விவசாயி களுக்கு 60 ஆயிரம் எக்டேரில் ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்த 1.80 கோடி ரூபாய் வழங்கப்படும்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத்துறை அமைச்சர்)

★ அரசுக்குச் சொந்தமான ஆவின் நிறுவனம், முதன்முறையாக 6 கோடி ரூபாய் ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டில், கிராமப்புறப் பெண்களின் முன் னேற்றம் கருதி, அனைத்து மகளிர் ஆரம்பப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும். எதிர்காலத்தில், பஞ்சாயத்துக்கு ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

—திரு. ஜனார்த்தனன்
(பால்வளத்துறை அமைச்சர்)

# ~பூம்புகார்~



தமிழகத்தில் உள்ள பாரம்பரியம் மிகுந்த கைவினைப்பொருட்கள் முன்னேற்றத்தையும் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு 'பூம்புகார்' நிறுவனம் 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 19 விற்பனை நிலையங்கள் மூலம், தமிழகத்தின் தொன்மை வாய்ந்த அரிய கலைப்படைப்புகள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. தமிழகத்தில் மட்டுமில்லாமல், திருப்பதி, பெங்களூர், புதுடெல்லி, கல்கத்தா போன்ற பிற மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களிலும் இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் உள்ளன.

பித்தளை, பஞ்சலோகம், மரச்சிற்பங்கள், கற்களால் ஆன கலைப்பொருட்களைத் தயாரிக்கும் 9 உற்பத்தி நிலையங்களையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களில் கைதேர்ந்த கைவினைஞர்கள் உற்பத்திப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1973-74-ஆம் ஆண்டு தொடங்கியபொழுது இந்நிறுவனத்தின் விற்பனை ரூ.53 இலட்சம் என்ற அளவில் இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து 1992-93-இல் ரூ.700.14 இலட்சத்தை எட்டியுள்ளது. இதுபோலவே உற்பத்தியும் ரூ.7.73 இலட்சத்திலிருந்து ரூ.150 இலட்சத்திற்கு 1992-93-ஆம் ஆண்டில் எட்டியுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் ரூ.750 இலட்சம் விற்பனையும் ரூ.160 இலட்சம் உற்பத்தியையும் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் தனது விற்பனை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை தவிர தமிழகத்திலும் மற்றும் அண்டை மாநிலங்களிலும் உள்ள திருக்கோயில்களுக்குத் தேவைப்படும் தங்கத்தேர், வெள்ளித்தேர், பித்தளை உண்டியல்கள், பித்தளை மணிகள் மற்றும் வாகனங்களை உற்பத்தி செய்து வழங்கும் சிறப்புப் பணியையும் மேற்கொண்டு வருகிறது.

# சூரிய ஒளி மூலம் தெரு விளக்கு



11 வாட்ஸ் சக்தியுள்ள தெருவிளக்கு ஒன்றின் விலை ரூ. 25,000/- நாளொன்றுக்கு மின்சக்தி சேமிப்பு 30 யூனிட்டுகள் தமிழ் நாட்டில் இதுவரை நிறுவப்பட்டுள்ள தெருவிளக்கு எண்ணிக்கை : 984

TEDA

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**தமிழ் நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனம்**

'டெம்பிள் டவர்' 25, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி எண் : 74845 & 74846

DIPR/592/D15/94





# காவல்துறையின் சாதனைகள்! –மாண்புமிகு முதல்வர்

* தமிழ்நாட்டில் முன்பு சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இப்போது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள். விடுதலைப் புலிகளைத் தமிழ் மண்ணிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சியில் சிறப்பான வெற்றியைப் பெற்றிருக்கிறோம். சட்டம்ஒழுங்கைப் பராமரிப்பதில் இது ஒரு சிறந்த சாதனை.

* பஞ்சாப், காஷ்மீர், மற்றும் வடகிழக்கு மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் பயங்கரவாதத் தொந்தரவு மிகவும் குறைவு.

* பெண் காவலர் நிலையங்கள் அமைப்பதில் தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது. இது உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. ஒருவேளை பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் திறக்கப்பட்டதற்கு உந்துதலாகத் தமிழகம் இருந்திருக்கலாம்.

* யானைத் தந்தங்கள் மற்றும் சந்தனக் கொள்ளையன் கொலைகார வீரப்பனின் கூட்டாளிகள் பெரும்பாலும் பிடிக்கப்பட்டு விட்டனர். இப்போது அவன் தனிமைப் படுத்தப்பட்டு மனமொடிந்த நிலையில் உள்ளான் விரைவில் அவனும் பிடிபட்டு விடுவான். இவனைக் கைது செய்யும் பணி விரைவில் நிறைவுறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

* எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தனிப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்கள் இந்த நாட்டின் அன்பிற்குரிய தலைவர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்துவிட்டார்கள். இந்த நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அவர்கள் ஊறு விளைவிக்கிறார்கள். ஆகவேதான், இதை ஒரு தேசியக் கடமையாகக் கருதி நாங்கள் அவர்களை எதிர்க்கிறோம்.

* அதில் மத்திய அரசு தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும் எங்களுக்குத் துணை நிற்கவேண்டும் என்று கேட்கிறோம்.

*எந்த வகையிலும் இது ஒரு தேசிய அளவிலான பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் கருதப்பட வேண்டும் என்று பலமுறை தெளிவுபடுத்தியுள்ளேன். ஆனால் மத்திய அரசு திரும்பத்திரும்ப தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போலவும், இது ஏதோ தமிழக அரசு தன்னுடைய அதிகார வரம்புக்குள்ளே தானே செய்யவேண்டிய பிரச்சினை போலவும், இது ஏதோ தமிழகத்தை மட்டும் பாதிக்கின்ற பிரச்சினை என்பது போலவும் நடந்து கொண்டுள்ளது.

* விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை ஒடுக்குவது என்பது தமிழக அரசின் பொறுப்பு மட்டுமல்ல மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால், இப்பிரச்சினையில் நாட்டின் பிரதமர் பேசமாட்டேன் என்கிறார், உள்துறை அமைச்சரோ பொறுப்பைத் தட்டிக்கழிக்கப் பார்க்கிறார். மொத்தத்தில் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு இரட்டை நிலை எடுத்துச் செயல்படுகிறது.

* நாட்டின் பாதுகாப்புடன் இணைந்த ஒரு பிரச்சினையை அவர்கள் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களே நாட்டின் இறையாண்மையைப் பற்றி, இந்த நாட்டைச் சின்னாபின்னமாக்க ஒரு போராளிக் கும்பல் முயல்வதைப் பற்றி அக்கறை காட்டவில்லையென்றால் இந்த நாட்டின் எதிர்காலம் என்னாவது?

* கடற்கரையோரப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து, முழு அளவிலான ஒரு பாதுகாப்புத் திட்டம் ஒன்று ரூ.12 கோடி செலவில் வகுக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

* கோவில்களையும் அவற்றின் சொத்துக்களையும், மற்றும் அவற்றின் விலைமதிப்புள்ள பொருட்களையும் பாதுகாப்பதற்காக இவ்வரசு விரைந்து செயல்பட்டு வருகிறது 'கோவில்கள் பாதுகாப்புப்படை' என்ற பெயரில் ஒரு தனிப் படையை இப்பணிக்கெனவே அரசு ஏற்படுத்தியுள்ளது.

*— 21.4.94 அன்று சட்டப்பேரவையில் வைத்த காவல்துறை மானியக் கோரிக்கை மற்றும் உரையிலிருந்து.*



# மே நாள் புரட்சித் திருநாள்!

குனிந்த தலைகள் நிமிர்ந்த நாள்!-ஒரு
கொள்கை முழக்கம் எழுந்தநாள்!
இணைந்த கரங்கள் உயர்ந்த நாள்! - ஓர்
எழுச்சி இயக்கம் பிறந்த நாள்!

உழைக்கும் கரங்கள் உயர்ந்தநாள்! - ஓர்
உரிமை கீதம் பிறந்த நாள்!
துளைக்கும் கவலை தொலைந்தநாள்! - பழந்
துயரக் கதைகள் மறைந்த நாள்!

முதுகு முளைத்தது இன்றுதான் - உயிர்
மூச்சுப் பிறந்தது இன்றுதான்
சிறகு முளைத்தது இன்றுதான் - சுய
சிறைகள் தகர்ந்தது இன்றுதான்.

மேதின நாளொரு காவியம்! - அதில்
மேதினி காண்பது ஜீவியம்!
சாதனை புரட்சியின் காரியம் - எனச்
சாட்சி உரைத்தது வானகம்!

வியர்வையில் வெற்றி மணக்கவும் - புது
வேகக் கவிதைகள் பிறக்கவும்
புயலாய் எழுந்தது மானுடம் - அதைப்
போற்றிப் புகழுக யாவரும்!



## கவிஞர் இளந்தேவன்





# தலைசிறந்த தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் தகுந்த சூழ்நிலைகள்

மாண்புமிகு முதல்வர் உரை -

**13.4.'94 அன்று, சென்னையில் நடைபெற்ற தென் மண்டலத் தொழில் அதிபர்கள் மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.**

“மாநிலங்கள்: வளர்ச்சிக்கான உக்திகள்” என்பது பற்றிய கருத்தரங்கை ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்துக் கொண்டமைக்காகத் தென் மண்டல இந்தியத் தொழில் கூட்டமைப்பை நான் வாழ்த்துகிறேன். இந்தியத் தொழில் கூட்டமைப்பு, இந்தியத் தொழில் துறையின் தலைமைசான்ற பிரதிநிதித்துவ அமைப்பாக முன்னோக்கிச் செல்வதை நான் அறிவேன். இந்திய அரசின் தாராளமயமாக்கல் கோட்பாடு எழுந்துள்ள இச்சூழலில், தொழில் வளர்ச்சியில் மாநிலங்களின் பங்கு பற்றி ஆலோசிக்க, தென் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் இங்கு, இன்று வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

தாராளமயமாக்குதலை, வலியுறுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய சவால்களை உருவாக்கியிருக்கிறது. உரிமங்களும் கட்டுப்பாடுகளும் தேவையில்லை என்பது சீர்திருத்தங்களின் முதற்படி, சுலபமான ஒன்று. விரைவான வளர்ச்சியை வளர்ப்பதற்காக, தக்க சூழலை உருவாக்குவது, இரண்டாவது நிலையும், மிகக்கடினமான நிலையும் ஆகும். மேலும், பெரும்பாலான மக்களுக்கு ஏற்ற வகையில், வளர்ச்சிக்கான முறைகள் அர்த்த முள்ளவைகளாக அமைய வேண்டும். அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதை விரைவுபடுத்துவது, யாருக்காக உருவாக்கப்பட்டதோ அந்த மக்களை முன்னேற்றத்துக்கான புலன்கள் சென்றடைவதை உறுதிப்படுத்துவது, ஆகிய இரண்டாவது கட்டத்தைப் பொறுத்த வரையில் மாநில அரசுகளுக்கு முக்கியமான பங்குள்ளது.

தொழில் வளர்ச்சி, அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நம் நாட்டிற்குள்ளேயே புதிய பணிகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பில்லாத வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளைச் சமாளிப்பதில், மேற்கத்திய நாடுகள் கூடச் சிரமப்படுகின்றன. வறுமை ஒழிப்பு, உயர்ந்த முன்னுரிமை பெற வேண்டிய இந்தியாவைப் போன்ற ஒரு வளரும் நாட்டில், வளர்ச்சி




முறை மூலமாக வேலைவாய்ப்பளிப்பதை, துரிதப்படுத்தும், உத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். எனவே, அதிகப் பணியிடங்களை உருவாக்கிட உதவும் வகையில், உற்பத்தித் திறனை விரைவாக வளர்ப்பதில், கவனம் செலுத்த வேண்டும் என்பது என் கருத்தாகும். இன்று இங்கு கூடியுள்ள தொழில் அதிபர்களை நான் வேண்டிக்கொள்ளுவது என்னவெனில் வேலை வாய்ப்பை, உருவாக்குவதில், ஆக்க பூர்வமான தாக்கம் விரைவில் ஏற்படும் வகையில், வளர்ச்சிக்கான முறைகளை முன்நடத்திச் செல்லவும், அவற்றை மேலும், தகுதியுள்ளவையாக ஆக்கவும், தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும். புதிய பொருளாதாரக் கோட்பாட்டின் ஒரு பகுதியாக இது அமையாவிட்டால் வளர்ச்சி முறைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்காது.

தொழில் வளர்ச்சியைப் பேணுவதற்குச் சிறப்பாகச் செயல்படும் ஒரு வலுவான அடிப்படை அமைப்பு ஒரு அவசியமான குறைந்தபட்சத் தேவையாகும். இரண்டாவதாக, தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் நடுவே பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க, தொழில் உறவுகள் சுமுகமாக அமைய வேண்டும்.

மூன்றாவதாக, அனுமதியளிப்பதும், மேற்பார்வையிடுதலுமாகிய மொத்த அமைப்பும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதன் மூலமாக திறனும், தொழில் ரீதியான அணுகுமுறையும் இந்த முறையின் இயல்புகளாக அமையும். கடைசியாக உற்பத்திக்கான சில முதன்மைக் காரணக் கூறுகளை அடைவது சாத்தியமாக்கப்பட வேண்டும். வளர்ச்சிப் போக்கை விரைவுபடுத்துவதில், மாநிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமையத் தேவையான நான்கு முக்கியமான பகுதிகள் இவையாகும்.

மாநில அளவில் வளர்ச்சிக்கான வழிமுறையை, நெறிப்படுத்துகின்ற அம்சங்கள் சிலவற்றை தமிழ் நாட்டின் சூழலை மனத்துள் கொண்டு, இப்போது உங்களிடம் விளக்க விரும்புகிறேன். எந்த வளர்ச்சி முறைக்கும், சமூக நல்லுறவும் சட்டம் ஒழுங்கைச் சரிவரப் பராமரித்தலும், அடிப்படைத் தேவைகளாகும். அமைதியை நிலை நாட்டுவதில், தமிழ்நாட்டில் நாங்கள், மிகச்சிறந்த சாதனை படைத்திருக்கிறோம். சட்டம் ஒழுங்கை, மிகச் சிறந்த முறையில் நாங்கள் தொடர்ந்து பராமரிப்போம் என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இந்த விஷயத்தில் எந்தவிதத் தயக்கமும் இன்றி உங்கள் அனைத்து முதலீடுகளையும் இங்கே செய்யலாம்.

வளமை வாய்ந்த, அடிப்படை வசதிகளை உருவாக்க, தமிழ் நாட்டில் நாங்கள் ஆவன செய்து வருகிறோம். கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் உள்ள அடிப்படை வசதியின் தரம், நாட்டிலேயே சிறந்த அடிப்படை வசதிகளின் தரங்களில் ஒன்றாக இருக்கிறது. அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய சராசரி அளவாகிய 100 புள்ளிகளுக்கு மாறாக தமிழ்நாட்டின் சராசரி 139 புள்ளிகளாக உள்ளது. மின்சாரம் போக்குவரத்து, தண்ணீர், நகர்ப்புற அடிப்படை வசதி போன்ற அம்சங்களில், நாங்கள் தொடர்ந்து கூடுதல் கவனம் செலுத்துவோம்.

1992-இல் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. மனிதநாட்கள் இழப்பு மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக இங்கே உள்ளது, என்று குறிப்பிடப்பட்டது. ஜவுளித் துறையில் ஏற்பட்ட தொடர் வேலை நிறுத்தத்தின் காரணமாக 1992-ல் மனித நாட்கள் இழப்பு கூடுதலாக இருந்தது என்பதையும் 1993-இல் இது சரிசெய்யப்பட்டு விட்டது என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மின்சாரத்திற்காகத் திட்டமிடுவதென்பது கடந்த காலத்தில், கோழியிலிருந்து முட்டையா? முட்டையிலிருந்து கோழியா? என்பது போன்ற பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது. தேவைகள் உருவாகும் வரை காத்திருப்பதும், பிறகு அவற்றுக்காக நடவடிக்கை எடுப்பதுமே வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. எப்படிப்பட்ட தேவை எழும் என்பதை எதிர்பார்த்து, புதிய உற்பத்தித் திறனை, உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள நமது மாநிலம் தீர்மானித்திருக்கிறது.

பிரமாண்டமான ஒரு மின் திட்டத்தை தமிழ்நாடு தொடங்கியிருக்கிறது. 1,500 மெ.வா. திறன் கொண்ட ஜெயங்கொண்டம் லிக்னைட் மின்திட்டத்தை, ரூ.7,500

கோடி செலவில் கூட்டுத்துறையில் தொடங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை நாங்கள் மேற் கொண்டிருக்கிறோம். மேலும் கடலூரில் நிலக்கரியைக் கொண்டு இயங்கும், 1000 மெ.வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு திட்டத்தையும், நெய்வேலியில் ஒரு 250 மெ.வா. திறன் கொண்ட லிக்னைட் திட்டத்தையும், தனியார் துறையில், ஏற்பாடு செய்யத் திட்ட மிட்டுள்ளோம். 300 மெ.வா. திறன் கொண்ட எரிவாயுவால் இயங்கும் ஒரு மின்திட்டம் தனியார் துற்றையில் நாகப்பட்டினத்தில், ஏற்படுத்த ஊக்கம் அளித்து வரு கிறோம். நிலக்கரியை அடிப்படை யாகக் கொண்ட இதுபோன்ற மின் நிலையங்கள் வடசென்னையிலும், தூத்துக்குடியிலும் தனியார் துறை யின் பொறுப்பில் விடப்படும்.

எதிர்காலத்திற்குத் தேவைப்படும் போதுமான மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கோடு, கூடுதல் மின்சாரம் பெருக்கத்திற் கான திட்டங்களை துணிவோடு நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை இவற்றால் நீங்கள் காண முடியும். கூடங்குளம் அணுமின் சாரத் திட்டத்தையும், நெய்வேலியில் 3-வது சுரங்கத் திட்டத்தையும் விரைவாகத் தொடங்கும் வகையில் மத்திய அரசு பரிசீலனை செய்யும் என்று நாங்கள் நம்புகின்றோம். கைகா அணு மின்சாரத் திட்டத்தில் நாங்கள் பங்கெடுக்க முடிவு செய் திருக்கிறோம். 10 ஆண்டுகாலத்திற் குள் 5,000 மெ.வா. மின்சாரத் தைக் கூடுதலாகப் பெறமுடியும் என்று உறுதியாக நம்புகிறோம். மின்உற்பத்தித் திட்டத்திற்கு, அதிக முன்னுரிமை வழங்கும் அதே நேரத்தில், மின்விநியோகப் பணி களின் தரம் பற்றிய பிரச்சினை யையும் நாங்கள் ஒதுக்கி விட வில்லை. தமிழ்நாட்டில், மின் விநியோகப் பணியை மேம்படுத்த ஒரு பெரும் திட்டத்தை ஆசிய அபி விருத்தி வங்கி உதவியோடு மேற் கொள்ளவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

மின்சாரப் பிரச்சினை பற்றி விவாதிக்கின்ற இந்த நேரத்தில் தென் மாநில எரிவாயுத் தொகுப்பு அமைப்பு என்பது, தென்மாநிலங் களுக்கு மிக முக்கியமாகத் தேவைப் படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டம், திட்டம் என்னும் நிலையிலிருந்து விரைவில், செயலாக்க நிலையை அடைய வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். பாம்பே ஹை (Bombay High) பகுதியில் பெறப்படும் உபரியான எரிவாயுவைக் கொண்டு, தொடக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஓமன், அல்லது ஈரானிலிருந்து கடலுக்குக் கீழ், குழாய் மூலம் எரிவாயுவைக் கொண்டுவந்து விநியோகிப்பதே முடிவான தீர்வாக அமையும்.

இத்திட்டத்தைத் தொடங்கு வதற்கு தென்மாநிலங்கள் கூட்டாக முதலீடு, செய்யலாம் என்ற யோச னையை நான் தான் முதன்முதலில் கூறினேன். தென் மாநிலங்களில் புதிய தொழில் வளர்ச்சிக்கான முன்னோடித் திட்டமாக, இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர்ந்து கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் தொழில் முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் அமைய வேண்டும் என்றால், போக்குவரத்து வசதிகள் மேம்பட்ட வகையில் இருக்க வேண்டும் என்பது அவசியம். ரூ.880 கோடி செலவில் சாலை களை மேம்படுத்தும் திட்டத்தை, நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

## கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு குடும்ப நலநிதி உயர்வு

தமிழக அரசு ஊழியர்களில் இறந்தவர்களின் குடும்ப நலநிதி ரூ.40,000-லிருந்து ரூ.60,000-ஆக உயர்த்தி வழங்க தமிழக அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருப்பதைப் போன்று, தமிழகத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களுக்கும் குடும்ப நல நிதியை ரூ.60,000-ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக் கையைப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் ஒன்றியங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி இருந்தனர். அவர்களது கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் குடும்ப நல நிதித் திட்டத்தைக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் அமல்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஆண்டிற்குச் செலுத்தும் தவணைத் தொகை ரூ.129-உடன் அவர்கள் பணியாற்றும் சங்கங்கள் ஒவ்வொருவருக்கும் செலுத்தும் தவணைத் தொகை ரூ.129-ஐ சேர்த்து மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு 258 ரூபாய் தவணைத் தொகை செலுத்துவதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குடும்ப நல நிதி ஏற்கெனவே வழங்கப்படும் ரூ.40,000-லிருந்து ரூ.60,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

இதற்கான நிதி வசதிக்கு, உலக வங்கியை அணுகியிருக்கிறோம். Infrastructure Leasing and Financial Services Ltd. நிறுவனத்தோடு சேர்ந்து சில முக்கிய வளர்ச்சிப் பணிகளை நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். இத்திட்டத்தை விரைவில் தொடங்குவோம் என்று நம்புகிறோம். நிலக்கரி இறக்குமதி வசதிகளைப் பெருக்கும் நோக்கோடும் அதன் பின்புலத்தை மேம்படுத்தும் நோக்கோடும் கடலூர்த் துறைமுகத்தின் திறனை விரிவான ஆய்வுக்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெருந்தொழில்களுக்கு; போதிய தண்ணீர் வசதி செய்து தருவது தமிழகத்தில் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. 1995-இல் கிருஷ்ணா நதி நீர்த் திட்டமும், புதிய வீராணம் திட்டமும் நிறைவேற்றப்படும் என்று உறுதியாக நம்புகிறோம். சென்னைப் பெருநகரில், தண்ணீர்ப் பற்றாக் குறையை நிரந்தரமாகத் தீர்க்க, இந்த மாபெரும் திட்டங்கள் உதவும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, சென்னைப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள், ஏராளமான நிலத்தடி நீரைப் பெற்றுப் பயனடைய முடியும் என்று எதிர்பார்க்கிறோம். கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய நகரங்களுக்கு, தண்ணீர் வசதித் திட்டங்கள், 1994-இல் நிறைவடையும். கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, தொழில்களுக்குப் பயன்படுத்தலாம் என்னும் எனது யோசனை வரவேற்கப்பட்டு, திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, என்பதை இங்குக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகை முயற்சி இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

மணலிப் பகுதியின் தண்ணீர் வசதிக்கு உறுதுணையாக, கூட்டுத் துறையில் கடல்நீரை, நன்னீராக்கும் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும். கடந்த காலத்தின் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க, ஒரு பெரும் முதலீட்டுத் திட்டத்தோடு, தமிழகம் இவ்வாறு இத்துறையில் முன்னேறி வருகிறது.

நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில், நாங்கள் சிறப்புக் கவனம் செலுத்துகிறோம். சென்னை நகரைக் கவர்ச்சிகரமான, பெருநகரமாக ஆக்க, 4,000 கோடி ரூபாய் செலவில் 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டத்தை வடிவமைத்து வருகிறோம். 10 முக்கிய நகரங்களில் அவசியமான நகர்ப்புற அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கு, நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம்.

இரண்டாவதாக நான் குறிப்பிட விரும்புகிற, குறிப்பிடத்தக்க ஒன்று தொழில் உறவுச் சூழலாகும். நாங்கள் ஒரு கலாச்சாரத்தை வளர்க்க விரும்புகிறோம். அதன்படி சிறுவடிவாக்குதலும், மறுவடிவமைத்தலும் மட்டுமே இலக்கை அடைய உதவாது. தொழில்நுட்ப மேம்பாட்டுக்காகச் செய்யப்படும் முதலீட்டைத் தொடர்ந்து புதிய வேலை வாய்ப்பு வசதிகளை வளர்ப்பதே இலக்காக இருக்கும். இந்த மாநாடு, குறிப்பிடத்தக்க இனங்களை அடையாளம் காணவும், வேலை வாய்ப்பை உண்டாக்கும் வளர்ச்சியின் மீது தனிக்கவனம் செலுத்தவும் உதவும் என்று நம்புகிறேன். அமைதியான தொழில் உறவை உறுதிப்படுத்த இது மிகவும் அவசியமானதாகும். தொழில் உறவு குறித்த எங்களது அணுகுமுறை பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. எங்கள் மாநிலத்தில், ஆரோக்கியமான தொழில் உறவுக் கலாச்சாரத்தைத் தொடர்ந்து நாங்கள் பேணி வளர்ப்போம்.

விரைந்து அனுமதி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி, தொழிலதிபர்கள் என்னுடன் பேசியிருக்கிறார்கள். Guidance என்னும் அமைப்பைத் தொடங்கலாம் என்னும் முயற்சியை எடுத்துள்ளோம். அது சுலபமாக அணுகவும், விரைவாக அனுமதி பெறவும், உதவும் ஒரு வழிகாட்டி அமைப்பாக விளங்கும். Single Window தத்துவத்தின்படி இயங்க வேண்டுமென்று ஏற்கெனவே, நாங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறோம். இந்த ஆணைகளுக்கு, ஒரு ஸ்திரத்தன்மை விரைவில் வழங்கப்படும். அதே சமயத்தில் தொழில்துறை, எரிசக்தித் துறை, மின்துறை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஓர் இணைப்புக்குழு அமைக்கப்படும். மின் இணைப்புக்களை புதிய பயனீட்டாளர்களுக்கு, விரைவாக வழங்குவதை இது உறுதிப்படுத்தும்; கண்காணிக்கும்.

மேலும், இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தும், முயற்சிகளிலும், நாங்கள் துணிந்து முன்னேறியிருக்கிறோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். திருநெல்வேலிக்கு அருகில் கங்கைகொண்டான், ஈரோட்டுக்கு அருகில் பெருந்துறை, மதுரைக்கு அருகில் நிலக்கோட்டை, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் ஆகிய இடங்களில் தொழில் வளர்ச்சி மையங்கள் செயல்பட ஆயத்தமாக உள்ளன. சென்னைக்கருகில் ஒரு மாபெரும் தொழில் வளர்ச்சி மையத்தை நிறுவ தற்போது நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். வசதியான இடங்களை வழங்குவது, தமிழ்நாட்டில் ஒரு சிக்கலான விஷயமல்ல.

1992-ஆம் ஆண்டில் நான் வகுத்த மாநிலத் தொழிற்கொள்கை, எங்களது வரிக்கொள்கையையும், சலுகைகளையும் பற்றிய முழு விவரங்களையும் உள்ளடக்கி உள்ளது. தொழில் வளர்ச்சிக்கான உண்மையிலேயே ஒரு கவர்ச்சிகரமான சலுகைத் தொகுப்பைத் தமிழ்நாடு வழங்குகிறது. இந்தச் சலுகைத் தொகுப்பு இந்தியாவில் வழங்கப்படும் சலுகைத் தொகுப்புகளில் மிகச்சிறந்தது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. முதலில், முதலீட்டு மானியமோ அல்லது வேறு எந்தச் சலுகைகளோ எதுவானாலும், வாக்களித்தபடி வழங்குவதில் வரலாறு படைத்திருக்கிறோம். வரிச் சீரமைப்பில் ஒரு தெளிவான கொள்கையை நாங்கள் அமல்படுத்தியிருக்கிறோம்.

## மகளிர் மேம்பாட்டுக் கழகங்கள்

○ தமிழ்நாடு உள்ளிட்ட 16 மாநிலங்களில் மகளிர் மேம்பாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆந்திர பிரதேசம், பீகார், குஜராத், ஹரியானா, இமாசலப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு-காஷ்மீர், ஒரிசா, பஞ்சாப், உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், சண்டிகார் ஆகியவை இதர மாநிலங்கள் ஆகும். பெண்களுக்கு கடனுதவி அளிப்பது, பயிற்சி, மகளிர் விடுதி கட்டுவது, பெண்களுக்கான நலத்திட்டங்களை அமலாக்குவது ஆகியவை இக்கழகத்தில் செயல்பாடுகளாகும்.

வரி சீரமைப்புப் பொறுத்தவரை கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். வரியமைப்பு, முறையாக வகைப்படுத்தப்பட்டு, மிகதெளிவாக உள்ளது. விற்பனை வரியமைப்பு மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு, பொதுவான 5 வரி விகிதங்களாக அமைந்துள்ளது கடுமையான நிதிச் சிக்கல்கள் இருந்தபோதிலும், மூலப் பொருட்களுக்காக வழங்கப்படும் சலுகையை, பல்வேறு வகைப் பொருட்களுக்கும் நாங்கள் விரிவாக்கியிருக்கிறோம். நாங்கள் எதிர்நோக்கியுள்ள மிகக்கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலும் இந்தச் சீரமைப்பை வழங்கியிருக்கிறோம் என்பதை அன்பு கூர்ந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களது, வரிச்சீரமைப்புத் தொகுப்பு, எல்லோராலும் பாராட்டப்பட்டுள்ளது. வரிச்சீரமைப்பு முறையை இன்னும் சிறப்பாக்க, நாங்கள் ஆயத்தமாக உள்ளோம்.

தமிழ்நாட்டில், வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த மோசமான அம்சத்தையும் நான் காணவில்லை. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் போன்ற சில சட்டங்களும், கட்டுப்பாடுகளும் தொழில் துறையில், வளர்ச்சிக்கு எதிரானவை என்று கருதப்படுவதை, நான் அறிவேன். விரைவான வேலை வாய்ப்பு வளர்ச்சியை, நாம் நிச்சயப்படுத்த முடியுமென்றால், நமது பார்வையில் பழுது இருக்க வாய்ப்பில்லை என்று நான் நினைக்கிறேன். அதேசமயம், தனது சமூகப் பொறுப்பை, எடுத்துக் காட்டாக, சுற்றுச்சூழல் விதிமுறைகளை, அமல்படுத்துவதை, தொழில் துறை, உணர்ந்து செயல்பட வேண்டும். சீரமைப்பு முறையும், தொழில் துறையிடம் ஒரு பண்பட்ட, பொறுப்பு மிக்க செயல்பாட்டை எதிர்பார்க்கிறது.

சென்னைத் தொழில் பூங்கா திட்டத்திற்கு, ஒரு திட்டமான வடிவம் கொடுப்பதற்கு, நாங்கள் விரைந்து முயல்வோம். சென்னைத் தொழிற்பூங்கா நம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்; உலக நாடுகளின் தொழில் நுட்பத்தையும், முதலீட்டையும், நம் வாசலுக்கு அழைத்துவர உதவும் என்று நான் நம்புகிறேன். இந்திய அரசும், இந்தத் திட்டத்தின் தனிச்சிறப்பைப் பாராட்டி, நாம் கேட்டுள்ள அனைத்து உதவிகளையும் வழங்கும் என்பது என் நம்பிக்கை.

நம் மாநிலத்தில், விரைவான, அர்த்தமுள்ள வளர்ச்சிக்கான முற்போக்கு உத்திகளை உண்டாக்குவது நம்முடைய கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்று கூறி உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

திரு கோத்ரேஜ், திரு. சேஷசாயி ஆகியோர் சில கருத்துக்களை முன்மொழிந்திருக்கிறார்கள். உங்களது அனைத்துக் கருத்துக்களையும், குறிப்பாக, தமிழ்நாடு உள்ளூர்ச்சாதனையாளராக இல்லாமல், உலகளாவிய சாதனையாளராக விளங்க வேண்டும் என்னும் கருத்தை நாங்கள் மனத்தில் கொண்டிருப்போம் என்று உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். நமது குறிக்கோளும், விருப்பமும் அதுதான். மண்டலத் தலைமை அலுவலகத்தைப் பஞ்சாபில் அமைக்க, பஞ்சாப் முதலமைச்சர் தாமாக நிதி வழங்கியிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டது. இந்தியத் தொழில் கூட்டமைப்பு, நிதி நிலையில் பின் தங்கியதில்லை என்பதை அறிந்த போதிலும், மண்டல அலுவலகத்தைச் சென்னையில் ஏற்படுத்த நீங்கள் முன் வருவீர்களானால், நீங்கள் விரும்பும் எந்த உதவியையும் அளிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம் என்று உங்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன். மேலும் தற்போது எவ்வளவு என்று நான் குறிப்பிடாவிட்டாலும், பஞ்சாப் முதலமைச்சர் வழங்கியதைவிட அதிகமாக உங்களுக்கு வழங்குவோம் என்பதையும், நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, விரைவும் உந்தூக்கமும் அளிக்க உதவுகிற முக்கியமான விஷயங்களில் கருத்துச் செலுத்துகின்ற, அர்த்தமுள்ள பேச்சு வார்த்தைகளை நீங்கள் மேற்கொள்வீர்கள் என்னும் என் நம்பிக்கையை இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னையில், இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மண்டல அலுவலகத்திற்கு, ரூ.25 இலட்சம் தொகையைத் தமிழ்நாடு அரசு வழங்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்திற்கு ரூ.79 இலட்சம்: முதல்வர் நிதி ஒதுக்கீடு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம், பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திவருகின்றது. அவற்றில் பழங்கடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டமும் அடங்கும்.

தமிழகத்தில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 16 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், மற்றபகுதிகளில் இரண்டு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை விநியோகிக்கின்றன.

மேலும், அவர்களுக்குப் பல்வேறு கடன்களும் மானியமும் வழங்குகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டுறவுச் சங்கங்கள், பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு முனைந்து செயல்படுவதற்கும், பல்வேறு நிதியுதவிகளை வழங்குவதற்கும் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.79 இலட்சம் தொகையை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

## சென்னை மாநகரில் 24 மணி நேரமும் ரோந்துப் பணி:



# மாண்புமிகு முதல்வர் காவல் துறைக்கு 37 ஜீப்களை வழங்கினார்

தமிழ்நாடு காவல்துறையினை நவீனப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 6.4.94 அன்று காலை சென்னை மாநகரக் காவல் துறையின் சார்பாகப் புதியதாகப் பெறப்பட்ட 37 ஜீப்களை, சென்னை மாநகர ரோந்துப் பணியில் ஈடுப்படுத்துமுகத்தான் பச்சைக்கொடி அசைத்துத் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்றபின்பு எல்லாக் காவல் நிலையங்களுக்கும், ஜீப்களையும், தளவாடங்களையும், தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

24 மணிநேர ரோந்துப் பணியைச் சென்னை மாநகரில் செயல்படுத்த வேண்டுமென்கின்ற எண்ணத்தின் அடிப்படையில், ஒரு புதிய திட்டத்தினை வகுத்துத் தந்தார். தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்கீழ் 37 ஜீப்கள் பயன்படுத்தப்படும். இந்த 37 ஜப்களும் 92 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் இரண்டு காவல்நிலைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை ஒரு ரோந்துப் பிரிவு ரோந்து சுற்றி வரும். ஒவ்வொரு ரோந்துக் காவல் வண்டியிலும் ஒரு காவல்துறை உதவி ஆய்வாளரும், ஒரு தலைமைக் காவலரும், ஆயுதம் தாங்கிய சில காவலர்களும் இருப்பார்கள். மூன்று ஷிப்டுகளில் அதாவது 24 மணி நேரமும் செயல்படும் இந்த ரோந்துப் பணிக் காவலர்கள் நகரின் முக்கியமான பகுதிகளில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்ற சமூகவிரோதிகளைக் கண்காணித்து வருவார்கள்.

இந்த 37 ஜீப்களில் வயல்லெஸ் கருவிகளும், சைரன் மற்றும் எமர்ஜென்சி விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. எனவே, உடனுக்குடன் தகவல்களை மாநகர மத்தியக் கண்ட்ரோல் நிலையத்திற்குக் கொடுத்து மிகவிரைவில் மேல் நடவடிக்கை எடுக்க இந்த முறை உதவும். ஏற்கெனவே தற்போது பணியிலுள்ள 13 ரோந்து வண்டிகளும் இப்பணியில் உபயோகப்படுத்தப்படும். இந்த முறையின் மூலமாக குற்றநிகழ்வுகளைக் குறைக்கமுடியும். மேலும் அவசரத் தேவைக்குக் காவல் துறையின் சேவை மிகவிரைவில் கிட்டுவதற்கு வழிவகுக்கும்.

இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பச்சைக் கொடியைக் காட்டித் தொடங்கி வைப்பதற்கு முன்பு, மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு ஆர். ராஜகோபாலன் அவர்களிடம் இந்த ஜீப்களின் சாவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்டராமன், உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், காவல்துறை ஒற்றாய்வுப் பிரிவின் தலைவர் திரு ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், சென்னை மாநகரக் காவல்துறை இணை ஆணையாளர் திரு ஆர்.என். சவானி மற்றும் இதர அலுவலர்கள் பங்குபெற்றார்கள். ●

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

### வேளாண்மைப் பொறியியல் துறையின் விரைவான பணிகள்:

# புதுப்பொலிவு பெறும் திருக்கோவில் திருக்குளங்கள்

தமிழ்நாட்டில் பெரும்பாலும் எல்லாத் திருக்கோவில்களுக்கும் சொந்தமாகத் திருக்குளங்கள் உள்ளன. அவை பல ஆண்டுகளுக்கு முன்பு மழை நீரைத் தேக்கிப் பயன்படுத்தும் நோக்கத்தில் வெட்டப்பட்டன. அவற்றின் வடிவமைப்பு அதில் தேக்கி வைக்கும் நீரின் அளவிற்கு ஏற்பச் சதுரமாகவோ செவ்வக வடிவமாகவோ உள்ளன.

**கோவில் குளங்களின் தற்போதைய நிலை**

இக்கோவில் குளங்கள் தேவையான கவனிப்பின்றி மிகச் சீர்கெட்ட நிலையில் உள்ளன. பல கோவில் குளங்களின் நீர்வரத்து மதகுகள் அடைப்பட்டு மோசமான நிலையில் உள்ளன. நீரினை வெளியேற்ற உள்ள அமைப்புகளும், சரியான நிலையில் இல்லாமையால் குளத்தில், உள்ள நீரை, பெரும்பாலும் தூய்மை அற்ற நிலையில் வெளியேற்ற இயலாமல் உள்ளது. மேலும், கோவில் குளங்களில் நீர்த் தாவர வளர்ச்சி மற்றும் வண்டல் மண் சேர்க்கையால், கோவில் குளங்களின் நீர்ப்பிடிப்புத் திறன் குறைந்துள்ளது. இதனால் நிலத்தின் நீர் உறிஞ்சும் தன்மையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோவில் குளத்தின் நீரின் தூய்மை பராமரிக்கப்படாததால், கோவிலுக்கு வரும் பயணிகள் கோவில் குளத்தில் புனித நீராட வழிவகையில்லாமல் உள்ளது. மற்றும், கோவில் குளங்களின் படிக்கட்டுகள், பக்கச்சுவர் ஆகியவை பராமரிப்பின்றிச் சிதலமடைந்த நிலையில் உள்ளன.

கோவில் குளங்களின் தற்போதைய சீர்கெட்ட நிலையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோவில் குளங்களையும், சீரமைக்க உத்தரவிட்டு உள்ளார். எனவே, முதல் கட்டமாகத் தமிழ்நாட்டில் 370 கோவில் குளங்களை ரூ.400 இலட்சம் செலவில் சீரமைக்கத் திட்டமிட்டு, அதற்கான கருத்துருவிற்கு அரசு ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

**பணியின் குறிக்கோள்கள்**

1. கோவில் குளங்களிலிருந்து நம் முன்னோரின் நோக்கத்திற்கு ஏற்ற வகையில் பயன் கிடைக்கச் செய்தல்.

2. கோவில் குளங்களை அவற்றில் முழு கொள்ளளவிற்குக் கொண்டு வருதல்.

3. சுற்றுப்புறச் சூழல் காத்தல்.

**சீரமைப்புப் பணிகள்**

கோவில் குளங்களின் தற்போதைய மோசமான நிலைகளைப் போக்கிச் சீரமைத்துக் கோவில் குளங்களை அவற்றின் மூல நிலைக்குக் கொண்டுவர கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதன் மூலம் இலக்கை அடையலாம்.

1. கோவில் குளங்களின் உள்வரத்துக் கால், மற்றும் நீர் வெளியேற்றும் அமைப்புகளைச் சீர் செய்தல்.

2. கோவில் குளத்தில் உள்ள மக்கள், உயிரினங்களின் நலத்திற்குக்கேடான நீரை வெளியேற்றுதல்.

3. கோவில் குளத்தில் உள்ள களைகள், சகதி ஆகியவற்றை அகற்றித்தூர்எடுத்தல்.

4. கோவில் குளத்தின் அடிப்பரப்பில் களிமண், மற்றும் மணல் பரப்புதல்.

5. கோவில் குளத்தின் படிக்கட்டுகள், மற்றும் பக்கச் சுவர்களைச் சீர் செய்தல்.

6. மீன் வளர்த்தல்.

7. இதர பணிகள்.

*எஸ். கிருஷ்ணசாமி*
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை
சென்னை





## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# திருக்குளச் சீரமைப்புப் பணிகள்

ஆலயங்கள் சிறக்கவும் ஆன்மீக நெறி தழைக்கவும் அரிய திட்டங்கள் வகுத்து, செயல்படுத்திவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்து செம்மைப்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்து, செயல்படுத்தி வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ், புகழ்மிக்க திருக்கோயில்களின் திருக்குளங்களைத் தேர்வு செய்து, குளங்களை ஆழப்படுத்துதல், குளத்தின் கரையைப் பலப்படுத்துதல், சுற்றுச் சுவர் கட்டுதல் - படித்துறைகளைச் சீர் செய்தல், திருக்குளத்திற்கு நீர் கொணரும் வரத்து வாய்க்கால்களைச் செம்மைப்படுத்துதல், திருக்கோயில் திருக்குளத்தையொட்டியுள்ள பகுதிகளில் மரம் வளர்த்து அழகுபடுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற ஆணை பிறப்பித்துள்ளார்.

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் 370 திருக்குளங்களை ஆழப்படுத்திட சுமார் 4 கோடி ரூபாய் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

புகழ்மிக்க புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலயத் திருக்குளங்களை அழகுபடுத்தும் பணி ரூ.49 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 26 திருக்கோயில் திருக்குளங்கள் அழகும், புதிய பொலிவும் பெறும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறப்புமிக்க ஆலயம் ஆவுடையார்கோவில் ஆத்மநாதசாமி திருக்கோயில் கருங்கற்களால் வேயப்பட்ட கூரையும், தூண்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் காண்போர் கருத்தைக் கவரும் கலைப் பெட்டகம் ஆகும். இத்திருக்கோயில் திருக்குளம் ஒரு காலத்தில் அழகும் சிறப்புவாய்ந்ததாய் இருந்தது. ஆனால், இடைக்காலத்தில் பக்கச் சுவர் படிக் கட்டு இடிந்து நீர்ப்பரப்பு தூர்ந்து சீர்கெட்டுப் போனது. இத்திருக்குளம் சுமார் ரூ.3.5 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டு மீண்டும் பழைய பொலிவினைப் பெற்று உள்ளது.

புதுக்கோட்டை-அறந்தாங்கி சாலையில் 7-வது கல் தொலைவில் அமைந்திருக்கும் சிற்றூர் அழகாம்பாள்புரம் அம்மன் ஆலயம் சுமார் 55 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குலதெய்மாகக் கருதி வழிப்பட்டு வரும் இவ்வாலயம் 300 ஆண்டுக்காலம் தொன்மை வாய்ந்தது இந்த அம்மன் கோவிலுக்கு எதிர்ப்புறத்தில் 1.32 எக்டேர் பரப்பில் அமைந்துள்ள திருக்குளம் ரூ.1.99 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டு உள்ளது. திருக்குளத்தைச் சுற்றிலும் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் வளர்ந்தோங்குமானால், அப்பகுதி அழகிய பசுஞ்சோலையாகக் காட்சி தரும் என்பதில் ஐயமில்லை.

**கோவில் குளத்தின் உள்வரத்துக்கால் மற்றும் நீர் வெளியேற்றும் அமைப்பைச் சரி செய்தல்**

கோவில் குளங்களில், நீர் உள்ளே வருவதற்கும் உள்ள நீரை வெளியேற்றுவதற்கும் அமைப்புகள் உள்ளன. சில கோவில் குளங்களில் மேற்படி அமைப்புகள் இல்லாமல் இருக்கலாம். மேற்படி அமைப்புகளுக்குத் தேவையான கவனிப்பின்மையால், கோவில் குளங்களில் உரிய நீர் தேங்குவதில்லை. மேலும் கோவில் குளத்திற்கு நீர் வரும் நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஆதாரமில்லா ஆக்கிரமிப்பினாலும் கோவில் குளத்திற்கு நீர்வரும் வரத்துக்கால் அழிக்கப்பட்டு அதனால் கோவில் குளத்திற்கு உரிய நீர் கிடைப்பதில்லை. இதேபோல, கோவில் குளத்து நீரை தேவையானபோது வெளியேற்ற, நீர் வெளியேற்ற அமைப்புகள் பழுதடைந்துள்ளதால், இப்பணி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, கோவில் குளத்தின் நீர்வரத்து அமைப்பையும், நீர் வெளியேற்றும் அமைப்பையும் கோவில் குளத்தைப் பயன்படுத்துபவர்களின் ஒத்துழைப்புடன் சீர்செய்வது முக்கிய பணியாகும்.

**குளத்து நீரை வெளியேற்றுதல்**

அநேகமாக எல்லாக் கோவில் குளங்

திருமயம் தாலுக்காவிலுள்ள இளஞ் சாவூர் முத்துமாரியம்மன் ஆலயம் சுமார் 85 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆலயம் ஆகும். ஒரு குறிப்பிட்ட சமூகத் தினரால் இவ்வாலயம் கட்டப்பட்ட போதிலும் அனைத்து தரப்பினரும் ஒருங் கிணைந்து வழிப்படும் திருத்தலமாக இது விளங்குகின்றது.

சுற்றிலும் வயல்கள் சூழ, ஒருபுறத்தில் பெரிய கண்வாய் ஒன்று அமைய அழகுற அமைந்திருக்கும் இளஞ்சாவூர் ஆலயத் திற்கு அருகாமையில் 1.34 எக்டேர் பரப்புள்ள திருக்குளம் உள்ளது. இந்த திருக்குளம் ரூ.1.80 இலட்சம் செலவில் தூர் எடுக்கப்பட்டு - வரத்து வாய்க் கால்கள் செப்பனிடப்பட்டு அழகுபடுத் தப்பட்டு உள்ளன.

வடகாளம் கலியுக மெய்ய அய்யனார் ஆலயம் 300 ஆண்டு காலம் பழமை கொண்டது ஆகும். இவ்வாலயத்தின் மூல ஸ்தானம் நிலமட்டத்திற்கு கீழே இருந்தபோதிலும், மழைக் காலத்திலும் மூலஸ்தானப் பகுதிக்குத் தண்ணீர் வராமல் இருப்பது இத்திருத்தலத்தின் பெருமை ஆகும். இவ்வாலயத்தின் திருக் குளம் ரூ.1.99 இலட்சம் செலவில் சீர் செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

வல்லத்திராகோட்டை தர்மர் கோயில் 250 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. பாரதப் போரின் வரலாற்றுக் காட்சிகள் இங்கு சித்திரிக்கப்பட்டு உள்ளன. 1.24 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திருக்குளம் ரூ.1.50 இலட்சம் செல வில் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

முத்துப்பட்டிணம் முத்துக்காமாட்சி, அம்மன் ஆலயம் இருநூறு ஆண்டுகால தொன்மை வாய்ந்தது. சுமார் 48 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த அம்மனைக் குலதெய்வமாக கொண்டாடு கிறார்கள். இங்கு எமனுக்காகத் தனி சன்னிதானம் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும். இங்கு 1.24 எக்டேர் பரப் பளவில் அமைந்துள்ள திருக்குளம் ரூ.1.89 இலட்சம் செலவில் சீர்செய்யப் பட்டு உள்ளது.

இதைப்போன்று வாராப்பூர் திருக் கோயில் ஊரணி, மணமேல்குடி ஜெக தீஸ்வரர் கோவில் திருக்குளம், நற்பவளக் குடி மெய்ய அய்யனார்கோவில் திருக் குளம், திருமணஞ்சேரி பரமேஸ்வரி கோவில் திருக்குளம், வடவாளம் வெட்டி ஊரணி, அம்புக்கோவில் சிவன்கோவில் திருக்குளம், விசலூர், சிவகாமி அம்மன் குளம் கீழாநிலைக்கோட்டை அரியநாயகி அம்மன் திருக்குளம், பேரையூர் நாகநாத சுவாமி திருக்கோயில் திருக்குளம், கொன்னையூர் பொன்னமராவதி முத்து மாரியம்மன் திருக்கோயில் திருக்குளம், இடையப்பட்டி பிள்ளையார்கோவில் திருக்குளம், தெம்மாவூர் மாரியம்மன் கோவில் திருக்குளம், வேப்பம்பட்டி சுப்ர மணிய சுவாமி கோவில் திருக்குளம், வெண்ணாவல்குடி பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குளம், வயலோகம் சக்தி விநாயகர் கோவில் திருக்குளம், ஏம்பல் முத்தையா சுவாமி கோவில் திருக்குளம் சீர்செய்யும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.'

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தா. சந்திரசேகரன் ஆலயத் திருக்குளங்கள் அழகுபடுத்தும் பணி களைப் பார்வையிட்டு - அவற்றைச் செம்மைப்படுத்துவதற்குரிய ஆலோ சனைகள் வழங்கினார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு அகமுடையநம்பி மற்றும் அதிகாரி களுடன் அழகுபடுத்தப்பட்டுள்ள திருக் குளங்களைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், ''சீர்பெறும் திருக் குளங்களைச் சுற்றிலும் நிழல்தரும் மரங் களையும், பயன்தரும் செடிகளையும் நட்டு - பசுஞ்சோலைகள் உருவாக்கப் படும். முதற்கட்டமாக 26 குளங்களில் ரூ.49 இலட்சம் செலவில் நடைபெற்று உள்ள இச்சீரிய பணி அரசின் நிதி உதவி பெற்று புகழ்மிக்க புதுக்கோட்டை மாவட்டத்தின் பெருமைமிக்க ஆலய திருக்குளங்கள் அனைத்தும் அழகுப்படுத் தப்படும்'' என்று கூறினார்.

திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள வேளாண்மைப் பொறியியல்துறையின் செயற்பொறியாளர் திரு அகமுடையநம்பி அவர்களிடம் இப்பணி குறித்துக் கேட்ட போது,

''இத்துறை மண்வளப் பாதுகாப்பு, நில மேம்பாடு, சிறு பாசனத் திட்டப் பணிகள் போன்றவற்றை மட்டுமே இதுவரை நிறைவேற்றிவந்தது. அருள்மிகு திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்யும் பணி இத்துறையினால் நிறைவேற்றப்படுவது இதுவே முதன் முறையாகும்'' என்று குறிப்பிட்டார்.

ஆலயங்களில் முறையாக வழிபாடு நடத்திட வழிவகுத்து - ஆலய ஊழியர் களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி - ஆலய வழிபாட்டிற்குத் தேவையான மலர், இலை, புகை மணக்கும் குச்சிகள் போன்றவற்றைப் பெற்றிட நந்தவனம் திட்டத்தைச் செயல்படுத்தி - ஆலயங் களைப் புதுப்பிக்க நிதி ஒதுக்கி - புதிய ஆலயங்கள் உருவாக்க உதவிபுரிந்து அறநிலையத்துறையின் வரலாற்றின் பொற்காலம் படைத்திடும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அளப்பரிய ஆலயத் தொண்டுக்குத் திருக்கோயில் திருக்குளம் சீரமைக்கும் பணி சீரிய எடுத்துக்காட்டாகும்.

மாநிலம் தழுவிய இந்த மகத்தான பணியில் புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில் திருக்குளங்கள் பெற்ற பயன் குறிப்பிடத்தக்கது.

''ஆகாச கங்கையின்' புனிதத்தைப் பெற்றது என்று போற்றப்படும் திருக் கோயில் திருக்குளங்கள் அழகும் பொலி வும் பெற்று, ஆலயத்திற்கும் - சமுதாயத் திற்கும் பயன்தந்திட அரிய திட்டம் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களை தமிழ்கூறும் நல்லுலகமும் எதிர்கால வரலாறும் என்றும் நினைவுகூர்ந்து போற்றும் என்பதில் ஐயமில்லை!

**இரெ. மகாலிங்கம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்**

---

களிலும் தற்போதுள்ள தண்ணீர் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதாக உள்ளது. அத்தகைய தூய்மை அற்ற நீரை வெளியேற்றுவது இன்றியமையாதது. நீரை வெளியேற்ற மனிதச் சக்தியையோ, அல்லது இயந்திரச் சக்தியையோ பயன் படுத்தி வெளியேற்றுதல்.

**குளத்தில் உள்ள களைகள் சக்தி ஆகியவற்றை அகற்றித் தூர் எடுத்தல்**

கோவில் குளங்கள் பராமரிப்பின்மை யால் அவற்றில் களைகள் மற்றும் நீர்த்தாவரங்கள் வளர்ந்துள்ளன. மேலும், குளங்கள் பல ஆண்டுகளாகத் தூர் எடுக்கப்படாமையால், தூர்ந்து அவற்றின் கொள்ளளவு குறைந்து உள்ளன. இவ்வாறு இருப்பால் கோவில் குளங் களினால் சுற்றுவட்டாரப் பகுதியில் நிலத்தடி நீர் உயர வாய்ப்பு குறைந்து உள்ளது. எனவே, கோவில் குளங்களை அவற்றின் மூலக் கொள்ளளவிற்குக் கொணரவும் கோவில் குளங்களின் சுற்று வட்டாரங்களில் நிலத்தடி நீர் ஆதாரம் அதிகரிக்கவும், கோவில் குளங்களில் களைகள் மற்றும் நீர்த்தாவரங்களை அகற்றித் தூர் எடுப்பது இன்றியமையாத பணியாகும்.

களிமண் மற்றும் மணல் பரப்புதல்

கோவில் குளங்களில் தேக்கி வைக்

கப்படும் நீர், தூய்மையானதாக இருக்க வேண்டும். கோவில் குளத்து நீர் தூய்மையாக இருந்தால் தான் கோவில் குளத்தைப் பயன்படுத்துபவர்கள் அதன் முழுப் பலனையும் அடைய முடியும். இவற்றைக் கருத்திற்கொண்டு, கோவில் குளத்தில் அடித்தளத்தில் களிமண், மற்றும் மணல் பரப்பப்படுகிறது.

**குளத்தின் படிக்கட்டுக்கள் மற்றும் பக்கச் சுவர்களைச் சீர்செய்தல்**

பல ஆண்டுகளாகப் பராமரிப்புப் பணி செயல்படுத்தாமையால் கோவில் குளங்களின் படிகள் பாசி பிடித்து, பக்கச் சுவர்கள் சேதம் அடைந்துள்ளன. கோவில் குளத்தின் பழுதடைந்த படிகள் மற்றும் பக்கச் சுவர்களைச் சீரமைப்பதன் மூலம், கோவில் குளத்தைப் பயமின்றிப் பயன்படுத்தலாம்.

**மீன் வளர்த்தல்**

கோவில் குளத்து நீரின் தூய்மை காத்திட கோவில் குளங்களில் மீன் வளர்க்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வளர்க்கப்படும் மீன்கள், கோவில் குளத்தில் நீரைத் தூய்மையாக வைத்திருப்பதுடன், கோவிலுக்கு வருமானம் கிடைக்க வழிவகை செய்கிறது.

**இதரப் பணிகள்**

மேலும், கோவில் குளங்களைச் சுற்றி நந்தவனம் அமைத்து சுற்றுப் புறச் சூழல் காக்கப்படுகிறது. மற்றும், கோவில் குளங்களைச் சுற்றி சுவர் வேலி, கதவுகள், அமைத்து, கோவில் குளங்களைப் பாழ்படுத்துவது தவிர்க்கப்படுகிறது. துணி துவைப்பது, பாத்திரம் தேய்ப்பது, மாடுகள் கழுவுவது ஆகியவைகளைப் பக்தர்கள் தவிர்க்குமாறு வேண்டுகோள் பலகை வைக்கலாம். மீறுபவர்களைத் தண்டிக்க அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கலாம். நீர்வரத்து ஆதாரங்கள் இல்லாத குளங்களில் ஆழ் குழாய்க் கிணறு அமைத்து நீர் நிரப்பத் திட்டமிடலாம்.

1. கோவில் குளத்திற்கு உரிய நீர் கிடைக்கிறது.

2. மிகையான மற்றும் தூய்மை குறைந்த நீரை வெளியேற்ற வழி கிடைக்கிறது.

3. கோவில் குளத்தின் கொள்ளளவு அதிகரிக்கிறது.

4. குளத்தின் படிக்கட்டுக்கள், பக்கச் சுவர்களைச் சீரமைப்பதால், பக்தர்கள் கோவில் குளத்தைப் பயமின்றி முழுமையான அளவில் பயன்படுத்த வழி ஏற்படுகிறது. தெப்பவிழா ஒவ்வொரு ஆண்டும் எடுக்க முடியும்.

5. நந்தவனம் அமைப்பதால், கோவில் வழிபாட்டுக்குரிய மலர்கள் கிடைக்கின்றன. மேலும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படுகிறது.

6. மீன் வளர்ப்பதால் குளத்து நீர் தூய்மையாவதுடன், கோவிலின் வருவாய்பெருக வழி ஏற்படுகிறது.

7. ஊரக வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

8. நிலத்தடி நீர் ஆதாரம் பெருகவழி வகுக்கிறது.

கோவில் குளங்களைச் சீரமைக்கும் பணிகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

கோவிலின் நிர்வாக அதிகாரி/தக்கார் ஆகியவர்களுடன் சீரமைப்புப் பணி தொடர்பாக விரிவான விவாதம் நடத்தி, பணி மேற்கொள்ளப்படுகிறது. கோவில் குளங்களைச் சீரமைக்கும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் செயல்படுத்தப்படுகிறது.

**வேலை வாய்ப்புகள் பெருகுதல்**

கோவில் குளங்கள் சீரமைக்கும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுவதால், கூலிக்கும், கூலியில்லாத செலவினத்திற்கும் 60:40 என்ற சதவிகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி கோவில் குளங்கள் கோவிலுக்குச் சொந்தமானவையாதலால் சீரமைப்புப் பணி முடிவுற்றவுடன், கோவில் குளங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள சீரமைப்புப் பணி விவரங்களைக் கோவில் நிர்வாக அலுவலர் தக்கார் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில், கோவில் குளச் சீரமைப்புப் பணிக்கு 31.12.1993 முடிய ரூ.300.48 இலட்சம் நிதிவிடுவிக்கப்பட்டுள்ளது. 250 பணிகள் தொடங்கப் பெற்று 140 பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. மேலும் ரூ.253.864 இலட்சம் செலவிடப்பட்டு, 8.218 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



## சித்த மருத்துவ மகளிர் விடுதி கட்டித்தர முதல்வர் ஆணை

**சென்னை - அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனையில் அமைந்துள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் பயின்றுவரும் மாணவிகள், தாம் தங்குவதற்காக ஒரு விடுதி கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தார்கள்.**

**சித்த மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் நலம் கருதி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 25 இலட்சம் ரூபாயில் 'பெண்கள் தங்கும் விடுதி' ஒன்றினை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளார். இந்த விடுதிக் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளதால், கட்டுமானப் பணியை விரைவில் மேற்கொண்டு முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.**



# டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்

**ஏப்ரல் 14. ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த நாள். இதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

சமூக நீதிக்காகவும், மனித உரிமைக்காகவும் தளராது உழைத்தவர்; இந்தச் சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய சட்ட மேதை; நாட்டின் சமூக, அரசியல் வாழ்வில் தமது அரும் பணியால் தனி முத்திரை பதித்தவர் அவர்தான் பாபா சாகேப் என்று அன்புடன் குறிப்பிடப்படும்' டாக்டர் பீம்ஜி ராவ் அம்பேத்கர்.

“சிந்தனையைத் தூண்டும் அவரது வாழ்க்கை, சமூகத்தில் மனிதர்களிடையே சமத்துவ உறவுகளும் மனிதக் கண்ணியமும் மலர வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் அரிய போதனைகள் நிறைந்ததாக அமைந்தது” அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களில் ஒருவர் கூறும் இந்த வார்த்தைகள், அவரது இலட்சியங்களையும் சாதனைகளையும் இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன.

இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் அவரது பங்குப் பணி மிகப் பெரியது என்பது உலகம் அறிந்த உண்மை. அந்தப் பணியின் அளவைவிட முக்கியமானவை அதன் தன்மையும் தரமும். “மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான நன்மை” என்ற தத்துவத்தை. அடிப்படையாக வைத்து அரசியல் சாசனத்தை அவர் அமைத்தார். நாட்டின் பொது வாழ்வில் அவர் ஆற்றிய மிகப்பெரிய பணி, மக்களிடையே சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் உயர்வு, தாழ்வு கற்பித்து பாரபட்சம் காட்டுவதை எதிர்த்துநடத்திய நீண்ட நெடும் போராட்டமாகும்.

## மும்முனைத் தத்துவம்

டாக்டர் அம்பேத்கர் தமது வாழ்க்கையை இந்தியாவில் சமூகக் கேடுகளை ஒழிப்பதற்கு, முக்கியமாக சாதி வேற்றுமைகளையும், தீண்டாமைக் கொடுமைகளையும் ஒழிப்பதற்கு, முழுமையாக அர்ப்பணித்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவை மூன்று முனைகள் என்று அவர் கருதினார். இவற்றில் எந்த ஒன்றையும் மற்றவற்றிலிருந்து பிரித்தால் ஜனநாயகக் கொள்கையின் நோக்கமே தோற்றுப்போகும். சுதந்திரம் இல்லாமல் சமத்துவம் இருக்கமுடியாது, சமத்துவம் இல்லாமல் சுதந்திரம் இருக்க முடியாது. அதேபோல் இவை இரண்டும் இல்லாமல் சகோதரத்துவம் இருக்க முடயாது. சமத்தும் இல்லையென்றால், சுதந்திரம் என்பது ஒரு சிலர், பலர்மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையாக மாறிவிடும். சுதந்திரம் இல்லாத சமத்துவத்தில் தனி மனிதனின் ஊக்கத்துக்கும் முயற்சிக்கும்' இடமில்லாமல் போகும். சகோதரத்துவம் இல்லை என்றால் சுதந்திரமும் சமத்துவமும் இயல்பாக இயங்க முடியாது.

டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கைப் பணிகளில்மிக முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்க பணி தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக அவர் ஆற்றிய அரும் பணியேயாகும். தாங்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, எத்தகைய இழிவான வாழ்க்கை வாழும் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அந்த மக்கள் உணரச் செய்தது அவரது சாதனையாகும். அவர்களின் பலவீனங்களை அவர் எடுத்துக்காட்டியதோடு அவர்கள் ஒற்றுமைப்பட்டு நின்றால் எத்தகைய மாபெரும் சக்தியாக உருவாக முடியும் என்பதையும் உணரச் செய்தார். கல்வியின் அவசியத்தையும், ஒற்றுமையை உருவாக்கும் ஒரு அமைப்பின் முக்கியத்துவத்தையும், தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு அமைதியாகக் கிளர்ச்சி செய்ய வேண்டிய தேவையையும் அவர் வலியுறுத்தினார். சமுகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை பெறுவதற்கு அவர் நடத்திய இயக்கத்துக்கு “கல்வி அமைப்பு, கிளர்ச்சி” என்பதே தாரக மந்திரமாக அமைந்தது.

இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய சிற்பி என்ற பெருமைக்குரியவர் பாபா சாகேப். தாராளக் கொள்கை கொண்ட ஜனநாயகத் தத்துவம் இதன் உயிரோட்டமாக அமைந்துள்ளது. இந்தச் சாசனம் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக மட்டுமன்றி, அரசின் வெவ்வேறு அமைப்புகளில் எந்த ஒன்றும் வரம்பு மீறிச் செயல் படாமல் மற்ற அமைப்புகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஏற்பாடுகளும், அவற்றின் அதிகாரங்களில் ஒரு சமச்சீர் நிலையைப் பாதுகாக்கும் வழிமுறைகளும் வியக்கத்தக்க முறையில் பின்னிப் பிணைந்த அமைப்பாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. சாதாரண



# உரிமைத் திருநாள்

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திருநாளாக, மே முதல் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிற திருநாள் ஆகும்.

"உழைக்கும் மக்களே, ஒன்று சேர்ந்திடுவீர்! பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! உழைப்பவரே உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர். புதிய சமதர்ம, சமத்துவ, சமுதாய அமைப்புக்கு முன்னோடும் சக்தியாகத் தலைமை தாங்கிடுவீர்!'' என உழைக்கும் வர்க்கத்தை இருகரங்கூப்பி அழைக்கிறேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்

இந்திய மக்களிடம் உள்ளார்ந்து அமைந்துள்ள விவேக உணர்வில் நம்பிக்கை வைத்து இது உருவாக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

## சமூக நீதி

அரசியல் அமைப்பு முறையின் வெற்றி சமூக அமைப்பையே சார்ந் துள்ளது என்பது டாக்டர் அம்பேத் கரின் கருத்து, "ஜனநாயக முறை யிலான அரசுக்கு, ஜனநாயக முறை யிலான சமூகமே அடிப்படை யாகும்" என்று அவர் கூறுகிறார். ஜனநாயக முறையிலான சமூகம் என்றால் அதில் ஒற்றுமையோ, ஒன்றுபட்ட நோக்கமோ, பொதுநலக் குறிக்கோள்களுக்கு விசுவாசமோ கட்டாயமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால், இரண்டு முக்கிய விஷயங்கள் அவசியம் இருந்தாக வேண்டும். ஒன்று, அந்தச் சமூகத்தின் மக்கள்

ஒருவருக்குகொருவர் மதிப்பும், சமத்துவ உயர்வும் கொண்டு நடக்கும் மனப்பான்மை, இரண்டா வது அழுத்தமான சமூகத் தடைகள் இல்லாத சமூக அமைப்பு.

அரசியல் சாசனத்தின் ஒருமைத் தன்மை பற்றியும் டாக்டர் அம்பேத் கர் அழுத்தமான கருத்துக் கொண் டிருந்தார். "ஒரு நாடு, ஒரு மதிப்பு என்ற ஜனநாயகத் தத்துவம் அர்த்த முள்ளதாக இருக்க வேண்டு மானால், அரசியல் சாசனத்தின் சட்டங்கள் அரசியல் அமைப்பில் வடிவத்தை வரையறை செய்தால் மட்டும் போதாது சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் வடிவத்தையும் அவை வரையறை செய்து கொடுக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

''மதச்சார்பின்மை'' பற்றியும் "சோசலிசம்" பற்றியும், குறிப்பாக அரசியல் சாசனத்தில் இவை இடம் பெற்றுள்ளது பற்றி டாக்டர் அம்பேத்கரின் கருத்துக்கள் இவற் றைப் பற்றி எழும் சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பனவாக உள்ளன. "மதச் சார்பற்ற அரசு என்றால் மக்களின் மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்கமாட்டோம் என்று பொருளாகாது என்றுஅவர் கூறினார். மேலும், "மதச் சார்பற்ற அரசு என் றால், இந்த நாடாளுமன்றம் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் மற்ற வர்கள் மீது திணிக்க முடியாது என்பதே பொருளாகும்'' என்று அவர் விளக்கினார்.

## பல்வேறு பணிகள்

டாக்டர் அம்பேத்கர் நமது தேசிய வாழ்க்கையில் ஏற்று நடத்திய பணிகள் பல திறப்பட்டவையாகும். அரசியல் சாசன நிபுணர், நாடாளு மன்ற உறுப்பினர், ராஜிய நிபுணர், சிந்தனையாளர், கல்விமான், எழுத் தாளர் என்று பல்வேறு துறைகளில் அவர் சாதனைகள் புரிந்திருக்கிறார். இந்தச் சமூகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி, தீண்டாமையை ஒழித்து, நீதியும் நேர்மையும் சமத் துவமும் கொண்டதாக அதைச் சீர்திருத்தி அமைக்க உதவும் வகையில் அதன் சிந்தனையைத் தூண்டி விட்டது அவர் செய்த சிறந்த பணிகளில் ஒன்று.

இந்திய அரசியல் சாசனத்தை நாட்டுக்கு அர்ப்பணத்து வைத்து 1949-நவம்பர் 25 - ஆம் தேதி அவர் பேசுகையில் தீர்க்கதரிசனமாக அவர் கூறிய கருத்து நினைவில் கொள்ளத்தக்கது. "அரசியல் சாச னம் நாட்டின் அரசியல் சுதந்திரத் துக்கு உத்தரவாதம் அளிக்கிறது ஆனால் பொருளாதார சமத் துவத்தை உருவாக்கி, சமூகத்தின் நலிந்த பிரிவு மக்களின் நிலையை உயர்த்துவதற்கு எல்லா முயற்சி களையும் நாம் எடுக்கத் தவறினால் நமது நம்பிக்கை ஒளியாக உள்ள இந்த அரசியல் சாசனத்துக்கே அபாயம் ஏற்படும் நாள் ஒன்று வரக்கூடும்'' என்று அவர் எச்சரித்தார். நமது நம்பிக்கை ஒளியான இந்தச் சாசனத்துக்கு எப்போதும் எந்த அபாயமும் வராமல் காப்பாற்றிக்கொள்வது நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் அனைவரின் கடமையும் பொறுப் பும் ஆகும்.

- பத்திரிகைத் தகவல் அலுவலகம்

**புதிய புதிய நூல்களைப் படிப்பதும், புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஏற்படும் உண்மையான செயலுமே கல்வியின் பயன்.**

**—டாக்டர் மு.வ.**

# நூல் நயம்

## பார்வை நேரம்

**ஆசிரியர்:** ராஜ்

**வெளியீடு:**

சுஜயா பப்ளிகேஷன்ஸ்,
பிளாட் 10, மோபரீஸ் சாலை,
ஆழ்வார் பேட்டை, சென்னை-18.

பக்கம்:159 விலை:ரூ.25/-

வெட்டிவைத்த கரும்புத் துண்டுகளாக இனிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு நூல்தான் இந்தப் 'பார்வை நேரம்'. 'கலி' என்பதில் தொடங்கி, 'அதிர்ஷ்டம்' என்பது வரையிலான இருபது கதைகள் இதில் அடக்கம்.

நூலாசிரியர், எழுத்தையே வருமானக் கருவியாகக் கொண்டிருப்பவர் அல்ல என்பது, ஒவ்வொரு கதையிலும் தெரிகிறது; அதேசமயம்- பாதிக்குப்பாதி உண்மைச் சம்பவங்கள்; மீதியில் படாடோபம் இல்லாத கற்பனை எழுத்தாட்சி இருப்பதை உணர முடிகிறது. ஒரு உதாரணம்-

பார்வையிழந்த ஒருவனின் டெலிபோன் பூத் அங்கே வந்து காதலியிடம் பேசும் இளைஞன், அவள் வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறவே- தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்கிறான். பார்வையிழந்த இளைஞன் எவ்வளவோ ஆறுதல் கூறியும் பொறுக்காத நிலையில்- ''அப்படியானால் உன் கண்ணை எனக்குத் தானம் செய்; உன் கிட்னியை இன்னொருவருக்குக் கொடுப்பதாக எழுதி வை'' என்கிறான்; வந்தவனோ ''சுத்த சுயநலக்காரன் நீ'' என்று கூறிவிட்டுப் போய்விடுகிறான். கடைசியில் தெரிகிறது- டெலிபோனில் அவனிடம் பேசியவள், பார்வை கெடாது இருந்தவரையில் இவனைக் காதலித்தவள் என்பது!

இப்படிக் கதைகள்; சிறுகதைப் பிரியர்கள் அவசியம் படிக்கவே வேண்டிய தொகுப்பு.

—பி.எல்.ஆர்.

## அம்பலவன் பழுவூர் நக்கன்

**ஆசிரியர்:** எஸ். குலசேகரன்

**வெளியீடு:**

அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-1,
வ.ஆ.அ. மாவட்டம்.

பக்கம்:222 விலை:ரூ.29/-

தாழ்ந்த குலத்தில் பிறந்து, பலவேறு பொது, சமூகப் பணிகள் மேற்கொண்டு புகழ்பெற்று, சோழர் வரலாற்றில் தனக்கென ஓர் இடம் பிடித்துக் கொண்ட 'அம்பலவன் பழுவூர் நக்கன்' பற்றிய கதை. நீதிக்காகவும், சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றவும் போராடும் மாவீரன் அம்பலவன் வரலாறு. அனைவரும் அறிய வேண்டிய ஒன்று.

—குமார்

## வாரிசு

**ஆசிரியர்:** செ. ஞானன்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:131 விலை:ரூ.18/-

மனிதர்களின் மறு பக்கங்களைச் சொல்லும் சிறுகதைகள். நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, கட்டுப்பாடற்ற, சௌகரிய வாழ்க்கை வாழுபவர்களின் இயல்புகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

இந்த அவலங்களை அம்பலப்படுத்தும் முறை மிக நாகரிகமாக இருப்பதற்கு நம் பாராட்டுகள்.

—குமார்

## கல்விக் கண்

**ஆசிரியர்:** நாகை தருமன்

**வெளியீடு:**

கார்த்திக் பதிப்பகம்,
36, ஏ-7, கோவிந்தன் சாலை,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

பக்கம்:83 விலை:ரூ.10/-

'ஔவையின்' பாடல்களுக்கு விளக்கம் தருவன போலமைந்த நீதிக் கதைகள். குழந்தைகள் நூல் என்றாலும் மற்றவர்களும் படித்து மகிழத்தக்க வகையில் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

## பெண்களுக்கேற்ற லாபம் தரும் சிறுதொழில்கள்

**ஆசிரியர்:** வசந்தி அம்மாள்

**வெளியீடு:**

மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு, சென்னை-600 094.

பக்கம்:112 விலை:ரூ.15/-

வெளிவேலைக்குச் செல்லாது வீட்டிலிருக்கும் பெண்களுக்கு, மிகவும் பயன்படத்தக்க 54 சிறுதொழில்களைப் போதிக்கிறது இந்நூல். வியாபாரச் சந்தையில் வெற்றி பெற வழிகள், சிறுதொழில் செய்யக் கடன் உதவி பெறுதல் போன்ற வழிகளும் கூறப்பட்டுள்ளன. குடும்பப் பெண்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்.

## பாம்புகளின் ரகசிய வாழ்க்கையும் பாம்புக் கடிக்கு முதலுதவியும் மருத்துவமும்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ்.என். முரளீதர்

**வெளியீடு:**

சூடாமணி பிரசுரம்,
36, ஏ-8, கோவிந்தன் சாலை,
மேற்கு மாம்பலம், சென்னை-33

பக்கம்:156 விலை:ரூ.20/-

பாம்பு இனத்தைப் பற்றிய பல அரிய செய்திகளைக் கொண்ட நூல் இது. பாம்புகளின் வகை. பாம்புகளின் இயல்புகள். பாம்பு கடிக்காமல் இருக்க என்ன முன்னெச்சரிக்கை. பாம்பு கடித்து விட்டால் என்ன செய்ய வேண்டும். பாம்பு மருத்துவத்துறைக்கு எந்த அளவு பயன்படுகிறது என்பதை இந்நூல் விளக்குகிறது. இது அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய நூல், கிராமத்து மக்கள், நகரங்களில் தோட்டங்களிடையே வசிப்போர் அனைவரது இல்லங்களிலும் இருக்க வேண்டிய நூல்.

## வீடியோப் படம் எடுப்பது எப்படி?

**ஆசிரியர்:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**வெளியீடு:**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:60 விலை:ரூ.20/-

'வீடியோ கவரேஜ்' என்பது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. திருமணம் திருவிழா என்றில்லாமல் பொதுவாக எல்லா நிகழ்ச்சிகளிலுமே இந்த வீடியோ இன்ற முக்கியப் பங்கு பெற்று விளங்குகிறது.

வீடியோப்படம் எடுப்பது பற்றிய எல்லாத் தகவல்களையும், செய்முறைகளையும் படங்களுடன் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இத்துறை மாணவர்க்கு இது ஒரு நல்ல துணைவனாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— கிரி.

## மாணவர் பக்கம்

# அது என்ன?



**— பி.வி. கிரி —**

அச்சுக் கோக்க உதவிடும்
அற்பு தங்கள் செய்திடும்
மெச்சத் தரும் வேலையை
மேலும் விரைந்து செய்திடும்
— அது என்ன?
— அது என்ன?

கடின மான கணக்கினைக்
கடுதில் போட்டு முடித்திடும்
விடிய விடிய ஓய்வின்றி
விந்தை புரியும் எந்திரம்
— அது என்ன?
— அது என்ன?

பயணச் சீட்டு வழங்கிடும்
பார்க்க அழகாய்த் தோன்றிடும்
துயரம் இன்றிப் பணியினைத்
துரித மாகச் செய்யலாம்
— அது என்ன?
— அது என்ன?

'நினைவில்' எல்லாம் வைத்திடும்
நோயைக் கூட அறிந்திடும்
இனிய இசையைப் பொழிந்திடும்
இதன் பெயரே 'கம்ப்யூட்டர்'!



**பிறருக்காக...**

◉ உனக்கென எதையும் விரும்பாதே. எல்லாவற்றையும் பிறருக்காகவே செய்.

**உழைப்பு**

◉ ஓயாமல் உழைத்துக் கொண்டு இரு. ஆனால், அந்த உழைப்பில் ஏதாவது ஒரு இன்பத்தைக் காண்.

**உதவி**

◉ உலகத்திற்கு உதவி செய்வதன் மூலம், உண்மையில் நமக்குத்தான் உதவி செய்து கொள்கிறோம்.

**மனத்தூய்மை**

◉ மனம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ, அவ்வளவு அதை எளிதாக அடக்க முடியும். மனத்தை அடக்க வேண்டுமானால், மனத்தூய்மை வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

## பொது அறிவு

வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டு பிடித்தவர் - லூயி பாஸ்டர்.

பரப்பளவில் பெரிய மாநிலம் எது - உத்திரபிரதேசம்.

இந்தியாவிலுள்ள நீளமான ஆற்றுப் பாலம் - பாட்னாவிலுள்ள மகாத்மா காந்தி பாலம்.

உலகில் யானைகளின் நகரம் என்று அழைக்கப்படுவது - சயாம்.

ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு எது?

பின்லாந்து.

அதிகாலை அமைதி நாடு என்று எந்த நாட்டைச் சொல்கிறோம்?

கொரியா.



## அஞ்சல்

◉ உலகிலேயே அதிக அளவு அஞ்சலகங்களைக் கொண்டுள்ள நாடு நம்நாடுதான். அவற்றில் 90 சதவிகித அஞ்சலகங்கள் கிராமப்புறங்களில் உள்ளன. கிராமப்புறங்களில் சராசரியாக 4,728 பேருக்கு ஒரு அஞ்சல் அலுவலகமும், நகரங்களில் சராசரியாக 13,511 பேருக்கு ஒரு அஞ்சல் அலுவலகமும் உள்ளன. செயற்கைக்கோள் மூலம் மணியார்டர் அனுப்பும் முறை சோதனை அடிப்படையில் நான்கு பெருநகரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. பின்பு இது 71 மையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

# பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்

கொங்கு நாடு பெரியார், கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்களையும், பழனி கரூர் வட்டங்களையும் தன்னகத்தே கொண்டது. கொங்கு நாட்டின் மையப் பகுதியாக விளங்குவது பெரியார் மாவட்டமாகும். பெரியார் மாவட்டம் உருவாக்கப் பட்ட பிறகு தொழில் வளர்ச்சியிலும், விவசாய வளர்ச்சியிலும், வியாபாரத் துறையிலும் முன்னேறி வருகின்றது.

நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைப்படி, பெரியார் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சிறுசேமிப்பு ஆலோசனைக்குழுத் துணைத்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே பெரியார் மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் முதன்மையும், வளர்ச்சியும் பெறுதல் வேண்டும் என்று அயராது பணிபுரிந்து வருகின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தும் திட்டங்கள் தேவையான மக்களுக்கு உரிய காலத்தில் சென்றடைதல் வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றது.

அரசுத் திட்டங்கள் குறித்து, பொதுமக்கள் நன்கு அறிதல் வேண்டும். குறிப்பாக-தாழ்த்தப் பட்ட மக்களும், பெண்களும் இத் திட்டங்கள் குறித்து நன்கு அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். திட்டத்தினால் பயன் பெறுவோர் பங்கு பெற்றால்தான் திட்டம் வெற்றி படையும். ஏழை எளியோர், மகளிர் இத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ள எழுத்தறிவு அவசியமாகும்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள 24 இலட்சம் மக்கள் தொகையில் சுமார் 4½ இலட்சம் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காததால் ஏழை எளியோர் மகளிர் பெருமளவில் எழுத்தறிவு பெறவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணையின்படி, பெரியார் மாவட்டத்தில் எழுத்தறிவு இயக்கம் 1993 மார்ச் 14-ஆம் தேதி முதல் துவக்கப்பட்டு, மிகச் சிறப் பாகச் செயல்பட்டு வருகிறது.

முதல் ஆறுமாத காலத்திற்குப் பெரியார் மாவட்டத்தில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கற்பிக்கும் பணி நடக்கப்படவுள் ளதை அறிவிக்கும் வகையில், பல வேறு வகையில் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. சுவரொட்டிகள், சுவரில் எழுதுதல், அறிவொளி பேரணிகள் நடத்துதல், அறிவொளி கலைப்பயணங்ள் நடத்துதல், கிராமங்களில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கலைக்குழுவினர்களுக்கு 5.4.93 முதல் 13.4.94 வரை பயிற்சியளிக் கப்பட்டது. கலைப்பயணம் முதற் கட்டமாக 300 கிராமங்களிலும், இரண்டாவது கட்டமாக 800 கிராமங்களிலும் நடைபெற்றது.

கலைப்பயணத்தின் மூலம் கல்வியின் இன்றியமையாமை கிராமங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பெரியார் மாவட்டம் முழுவதும் ஒரே நாளில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பற்றிய கணக்கெடுப்பு 28.11.93 அன்று நடைபெற்றது. இப்பணியில் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலர்கள், மாணவ மாணவியர்கள், பிற நிறுவன அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகிய அனைவரும் கலந்துகொண்டு இப்பணியினை மேற்கொண்டார்கள். இக்கணக் கெடுப்புப் பணியானது வீடு வீடாகச் சென்று அறிவொளி தன்னார் வலர்கள் எழுத்தறிவின் அரசியத்தை எடுத்துக் கூறியும் கல்லாமையைப் போக்கிடத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கிடும் நிகழ்ச்சியாக அமைந்தது.

கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட வீடுகளில், என் வீடு அறிவொளி வீடு என்ற நோட்டீசும், ஒட்டப் பட்டது. பெரியார் மாவட்டத்தில் கல்லாதவர்கள் எண்ணிக்கை 4 இலட்சத்து 944 பேர் எனத் தெரிந்தது. இவ்வனைவருக்கும் எழுத்தறிவிக்கும் பணியினைச் சிறப்புடன் செய்திட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப.,


**என்.எஸ். பழனியப்பன்**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**பெரியார் மாவட்டம்**




அவர்கள் 40 ஆயிரம் தன்னார் வலர்களைத் தேர்ந்தெடுத்திட உத்தர விட்டார்.

எழுத்தறிவிக்கும் பணியானது ஒரு புனிதப் பணியாகும். புனிதப் பணியில் அனைத்து மக்களும் சேர்ந்து செயல்படுதல் அவசிய மாகும். 41 இலட்சத்து 901 மையங்கள் ஏற்படுத்துதல், ஒவ் வொரு மையத்திலும் சுமார் 10 பேருக்கு எழுத்தறிவிக்கும் பணி யினை நடத்திடல்வேண்டும்.

இப்பணியினைத் தன்னார்வலர் களால்தான் செய்யமுடியும். வயது வித்தியாசம் பாராமல் எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் எழுத் தறிவிக்கும் பணியில் ஈடுபடலாம். முக்கியத் தேவை எழுத்தறிவில் ஆர்வம்தான். எழுதப்படிக்கத் தெரி யாதவர்கள் தொடர்ந்து மையங் களுக்கு வந்து கல்வி கற்கும் பழக் கத்தை ஏற்படுத்துதல் மிக அவசிய மாகும். முதல் பத்து நாள் வந்து விட்டு, பின்னர் வராமல் போய் விட்டால் திட்டம் தோல்வியுறும். எழுதப்படிக்க வருகின்றவர்களை அன்பாகவும், எழுத்தறிவு பெறு வதினால் ஏற்படும் பெருமை களையும், பயன்களையும் சிறப்பாக எடுத்துக் கூறி கல்வி கற்கும் மன மாற்றத்தை முடிவில் ஏற்படுத்துதல் வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ள அனை வருக்கும் தெரிவித்தார்.

நேரடி கற்பிப்போர் மையங்கள் துவக்க விழா, ஜனவரி 7 அன்று பெருந்துறையில் நடைபெற்றது. தற் சமயம் 21 ஆயிரம் மையங்கள் பெரியார் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இம்மாத இறுதிக் குள்ளாக அனைத்து மையங்களும் துவக்கப்பட்டு விடும். மார்ச் 19-ஆம் தேதியன்று அறிவொளி இயக்கம் தகவல் தொடர்புச் சாத னங்கள் என்ற கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் மாவட்டச் செய்தி யாளர்கள், அகில இந்திய வானொலி நிலையத்தினர் கலந்து கொண்டார்கள்.

பெரியார் மாவட்டத்தில் செயல் பட்டு வரும் அறிவொளி இயக்கத்தை



# பாவேந்தர்

*பாவலர் இரா. சுப்பிரமணியன்*

ஏறிய நெற்றி; கூரிய பாவை;
படர்ந்த முகத்தில் அடர்ந்த மீசை;
மலைபோல் தோள்கள் மணிபோல் கழுத்து;
வாள்போல் வீச்சு வழங்கிடும் பேச்சு;
தமிழின் பரிசு தமிழ்த்தாய் முரசு
முச்சங்க ஆய்வு முத்தமிழ்த் தோய்வு
அருந்தமிழ் ஊற்று அயன்மொழிக் கூற்று
அகன்ற மார்பு ஆழ்கடல் அறிவு
அரிமா சீற்றம் ஆளுமைத் தோற்றம்
இசையில் புலமை இசைக்கும் வன்மை
பாரதி காத்த பைந்தமிழ் மறவன்
தமிழரின் போர்வாள் தன்மானத் தமிழ்ப்பால்
பெரியார் பெரும்புகழ் பேசும் மணித்தமிழ்
புரட்சிப் பாடல் பொழியும் கார்மழை
கைகால் தேக்கு கடமைப் போக்கு
புயத்தின் பொலிவு பொதுமைப் புத்தகம்
தமிழ்தான் அவனுயிர் தனித்தமிழ் விளைபயிர்
இயற்கை அழகை எழுதிய திருக்கை
கொள்கைத் தமிழரின் குடும்ப விளக்கு
உவமையில் உருவம் உயர்எண்ண அமுதம்
நெருப்பின் சூடு நிலவின் குளிர்ச்சி
அச்சம் என்பது அணுவும் இல்லை
அன்னவன் புகழுக்கு அளவே இல்லை
எண்ணுக அவன்மொழி செல்லுக அவன்வழி!

# பழங்குடியினர் நலத்திட்டங்கள்: அரசு மூலம் பெரும் நிதியுதவி

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டமும் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் வனப் பிரிவின் கீழ் 1993-94-ஆண்டில் கொல்லிமலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, கல்வராயன் மலை மற்றும் பச்சை மலை ஆகிய பகுதிகளில் சந்தன மரம், புளியமரம், பலாமரம், மூங்கில் மரம், கடுக்காய் மரம், தேக்கு மரம் போன்ற மரவகைக் கன்றுகளை நட்டு காடு வளர்க்கவும்-சாலையோர மரங்களை ஏற்படுத்தவும்-ஏற்கெனவே செயல்படுத்தப் பட்டுவரும் திட்டங்களுக்காகவும், மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவற்றுக்காகவும் மொத்தம் ரூ.149.25 இலட்சம் தொகை ஆதிதிராவிட நலத்துறை மூலம் ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்.

இதன்படி சுமார் 371 எக்டேர் நிலப்பரப்பில், மேலே குறிப்பிட்ட மரக்கன்றுகள் புதியதாக நடப்படும், 45 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோர மரங்கள் நடப்படும், இதற்கு ரூ.35 இலட்சம் செலவிடப்படும். சேலம் மாவட்டம் கொல்லி மலை, பச்சை மலை, கல்வராயன் மலை, அருனூத்து மலை ஆகிய பகுதிகளில், ஓடையின் குறுக்கே 4 சிறிய நீர்த் தேக்கங்களும், 2 கசிவு நீர்க் குட்டைகளும் ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.2 இலட்சம் செலவிடப்படும். வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், ஏலகிரி மலையில் வனவிலங்குகளின் குடிநீர் தேவைக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு குளம் அமைக்கப்படும், மீதமுள்ள தொகை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், நிர்வாகச் செலவுக்காகவும் பயன்படுத்தப்படும்.

---

தாராபுரம் கோட்ட அளவில் திட்ட அலுவலர், கூடுதல் ஆட்சியர் திரு ஹர்மந்திர்சிங், இ.ஆ.ப., அவர்களும், ஈரோடு மற்றும் கோபி கோட்டத்திற்குத் தீவிர சுகாதாரத் திட்ட இணை இயக்குநர் திரு எஸ். வேலுசாமி அவர்களும், மண்டல அலுவலர்களாகக் கண்காணிப்புப் பணியினைச் செய்து வருகிறார்கள். 20 ஊராட்சி ஒன்றியங்கள், 5 நகராட்சிப் பகுதிகளில் துணை மாவட்ட ஆட்சித்தலைவர் தகுதியில் உள்ள அரசு அலுவலர்கள் பொறுப்பேற்றுக் கண்காணிப்பார்கள். தங்கள் தங்கள் துறையின் பணியைச் செய்துமுடித்த பின்னர், அறிவொளிப் பணியினையும் ஆர்வத்துடன் செய்திடுமாறு இவர்கள் கேட்டுக் கொள்ளபப்பட்டுள்ளனர். அறிவொளி மனிதச் சங்கிலி மே 1-ஆம் தேதி மாவட்டம் முழுவதும் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரியார் மாவட்ட அறிவொளி இயக்க நிர்வாகக் குழுவில் செய்தியாளர்கள் பிரதிநிதிகளையும் நியமித்து, பணியினை மேலும் சிறப்புடன் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேரடியாக கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்களுக்கு அரசு சார்பாகச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

ஒன்றிய-நகராட்சி-மாவட்ட அளவில் கற்போர்-கற்பிப்போர் மாநாடுகள் நடத்தப்படவுள்ளன. அனைத்து மகளிர் மாநாடும் நடத்தப்படவுள்ளது. ஏப்ரல் 14-ல் அறிவொளி இயக்க முப்பெரும் விழா நடைபெற்றது. பெரியார் மாவட்டத்தில் தாளவாடி, பர்கூர், குன்றி போன்ற மலைப்பகுதிகளில் மலைவாழ் மக்களும் பிற இனத்தவரும் அதிக அளவில் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளார்கள். சில இடங்களில் இவர்கள் பேசும் மொழி கன்னடமாகவும் உள்ளது. எனவே கன்னடம் பேசத் தெரிந்த தன்னார்வலர்களைக் கொண்டு அறிவொளி பணி நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காகத் தனியான பாடத்திட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் சில நகர்ப்புறங்களில் வாழ்கின்றவர்களில் சிலர், கைத்தறி ஆடை நெய்தல் போன்ற தொழில்களில் தினக்கூலியாகப் பணியாற்றி வருகிறார்கள். பணி முடித்து வீடு திரும்பிய பின், இவர்களுக்குக் கற்பிக்கும் பணி செய்வது சற்றுச் சிரமமாக இருக்கும். எனவே தொழிற்சாலை அதிபர்களுடன் பேசி, உணவு இடைவேளை ஓய்வு நேரத்தில் சிறப்புக் கற்பிக்கும் பணி செய்திடலாம் என்று முடிவெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேரடி கற்பிக்கும் மையங்கள் நடைபெறும் இடங்களில் மின்வசதி இல்லாத இடங்களில் பெட்ரோமாக்ஸ் மற்றும் அரிக்கேன் விளக்குகள் வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்ட அறிவொளி இயக்கத்திற்குத் தேவையான எழுது பொருட்கள், அறிவொளி திட்டம் 1, கற்பலகை, கற்பலகைக் குச்சி, சாக்பீஸ், கருங் கரும்பலகை ஆகியவைகள் அனைத்து மையங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்கப்பட்டுவிட்டன.

அறிவொளிப் பணியானது அனைவரும் இணைந்து செயல்பட வேண்டிய ஒன்று. அனைத்துசாராரும் தன்னார்வத்துடன் செயல்பட்டு பெரியார் மாவட்டத்தில் அறிவொளி பணியைச் சிறப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என்.எஸ். பழனியப்பன், அவர்கள் தெரிவிக்கிறார்.



75 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழர்களின்
தலைசிறந்த தயாரிப்புகளில்......

1917 75 YEARS 1992

NEW

Perry's
BISCUITS

OUR DELICIOUS PRODUCTS

Milk Max
Milk Plus
Milk-G
Marie
Mango-Delight
Glucose
Star Trek
Zoological
Gem
Sixer
Krakers
Doller
Coco-Dine
Coco-Plus
Fanta-Plus
Elaicki-Plus
Flower
Nursery
Tiffin

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

சுவைகளிலே புதுமைப்புரட்சி!!
தரத்தில் தனி இடம்!
சுவையில் தனி சுகம்!!

★ OUR SPECIAL VARIETIES ★

COOKIES ● COCONUT TASTE
FANTA DELIGHT ● ORANGE TASTE
MASALA DELIGHT ● MASALA TASTE

MFRS: Sri Pandian Bakers, Usilampatti - 626532
PHONES: 2036, 2236, STD: 04552
TEL:"PERRYS"

# தொல்காப்பியத்தில் அறிவியல் கருத்துக்கள்

முனைவர் வ. மாசிலாமணி
இயற்பியல் துறை
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை.

தமிழின் முதல் நூல் தொல்காப்பியம். இதற்கு முன்னும் பல நூற்கள் இருந்த தாகச் செய்திகள் உள்ளன வெனினும் அவை கிடைக்கப்பெறவில்லை. இதை இயற்றிய தொல்காப்பியர் முதல் இலக்கணி; தமிழின் முதல் புலவர்; முற்றிய புலவர் - இவரை அடுத்து வந்த திருவள்ளுவரும் இவரும் தமிழ் இலக்கிய வரிசையில் இருபெரு மேருகளாகத் திகழ்கின்றனர்.

இவருடைய காலம் இடைச்சங்க காலம், கடைச்சங்க காலம் என்று பலவேறு கருத்துக்கள் இருப்பினும் கிறிஸ்து பிறப்பதற்கு ஓரிரு நூற்றாண்டுகள் முன்னது இவருடைய காலம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கருத்து. இவர் அகத்தியர் மாணாக்கர் என்றும் ஐந்திரம் அறிந்த தொல்காப்பியன் என்றும் சமஸ்கிருத பாணினீயம் கற்றவர் என்றும் சொல்வதுண்டு. இத்தகைய குறிப்புகள் தவிர இவருடைய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் கிடைத்தில; தேவையுமில்லை. இவருடைய நூலே இவருடைய வாழ்க்கைச் செய்தி. (இத்தகைய பாரம்பரியம் தமிழ்ப் புலவர்கள் பலரிடம் இருந்திருக்கிறது).

தொல்காப்பியம் முதல் தமிழ் இலக்கண நூல். இந்நூல் மூன்று அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் அதிகாரம் எழுத்து: இதில் தமிழ் எழுத்துக்கள் எவை, அவை பிறக்குமிடம், எழுத்துக்களின் புணர்ச்சி முதலியன பற்றி விரிவான விளக்கம் உள்ளது. அடுத்தது சொல்லதிகாரம்: எழுத்துக்கள் சேர்ந்தோ தனித்து நின்றோ பொருள் தரும் பான்மையை விளக்குவது. இந்த இரு அதிகாரங்களும் இற்றைக்கால மொழியியலார் (Philologist) தோண்டித் தோண்டித் துவள வேண்டிய சுரங்கம்.

நாம் நேரடியாகப் பொருளதிகாரத்திற்குப் போய்விடுவோம். ஓர் இலக்கண நூலில் பொருளதிகாரம் இருப்பது புதுமை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே முகிழ்த்த புதுமை. ஏனென்றால் ஒரு மொழியின் சொல்லையும் எழுத்தையும் அதன் வழக்காறுகளையும் வரையறுப்பதுதான் இலக்கணியின் தொழில் என்பது மொழியியல் பாரம்பரியம்.

இந்தக் கட்டம் தாண்டி தொல்காப்பியர் ஒருபடி மேலே செல்கிறார். சொல்லும் எழுத்துமாகிய மொழி மனித வாழ்க்கைக்கு ஒரு துணைக் கருவிதான். எந்த ஒரு இலக்கியத்தின் நோக்கமும் மனித வாழ்க்கையின் பலவகைப் பரிமாணத்தை வெவ்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுவதுதான். எனில், ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறை பற்றியும் மரபு பற்றியும் வரையறை செய்தால்தான் அடுத்து வரும் இலக்கிய வரிசைக்கு வழிகாட்டியாக அமைய முடியும்; அப்போதுதான் ஒரு இலக்கண நூல் முழுமை பெற முடியும் என்பது தொல்காப்பியரின் தேர்ந்த கொள்கை.

இதன் அடிப்படையில் எழுந்த பொருளதிகாரம் மனித குழும வாழ்க்கை முறையை இரண்டாகப் பிரிக்கிறது. ஒன்று அகம்; அடுத்தது புறம். ஒருத்தனும் ஒருத்தியும் கூடிவாழும் காதல் சான்ற வாழக்கை அகம். உள்ளத்தே செறிந்து நின்று புறத்தே உரைக்க இயலாத மென்மையான உணர்வு காதல். செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலத்தல், களவு, கற்பு, ஊடல், கூடல், குழந்தை, குடும்பம் முதலிய அகவாழ்க்கையின் கூறுகள். அகத்தினைத் தவிர்த்த மற்ற அனைத்துச் செயல்பாடுகளும் — வீரம், கொடை, அரசியல் நெறி முதலிய - அனைத்தும் புறத்திணையில் அடங்கும்.

அக, புற வாழ்க்கைக் கூறுகளை ஒவ்வொன்றுக்கும் நிலமும் நேரமும், மரமும் இணைத்து விளக்கியிருப்பது தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் காட்டுகிறது. உளவியலாரும் (Psychologist), சமூகவியலாரும் ஊன்றி ஆய வேண்டிய பகுதிகள் இவை.

இந்தப் பொருளதிகாரத்தில்தான் பலவேறு இடங்களில் ஆழமும் அகலமுமான அறிவியற் கருத்துக்கள் விரவியிருக்கின்றன. அவற்றில் கருத்தூன்றுவோம் இனி:

**உலகம் என்பது என்ன?**

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கேட்கப்படும் கேள்வி. நெற்றியடியாகப் பதில் வருகிறது ஆசிரியரிடமிருந்து:

நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல் நெறி....
- சூத்.635)

மண், விண், தீ, நீர், காற்று என்று ஐம்பெரும் பூதங்கள் - மூலப்பொருட்கள் - கலந்தும் மயங்கியும் உலகம் உருவாகி உள்ளது. ''கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினால் போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல்'' என்பர் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர். (புறநானூற்றில் இதே போன்ற கருத்து வருதல் காண்க). உலகம் ஐம்பெரும் பூதங்களின் மயக்கம் என்ற கருத்து கிரேக்க அறிஞர்கள் பிதாகோரஸிடமும் எம்பிடோக்ளிஸிடமும் (Empedocles) மற்றும் ரிக்வேத முனிவர்களிடமும் இருந்தது என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

அடுத்து உலகின் பொருளை ஒட்டு மொத்தமாக எடுத்து இருதிணைகளாகப் பிரிக்கிறார். ஒன்று உயர்திணை; மற்றது அஃறிணை. திணையாவது ஒழுக்கம் இந்த ஒழுக்கம் அறிவின் செறிவு; பகுத்தறிவின் பயன். பகுத்தறிவுள்ள மனித இனம் ஒரு குழாம்; மற்றவை அனைத்தும் வேறு குழாம். இந்தப் பகுத்தறிவு எப்படி முகிழ்த்தது? எப்படிப் பரிமளித்தது? படிப்படியாக அறிவு பரிமாணம் (evolution of faculty) அடைந்தது என்கிறார் ஆசிரியர்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''
(சூத்: 581)

இந்தச் சூத்திரம் கூறுவதாவது: எல்லாவுயிர்க்கும் அறிவுண்டு; ஆனால் அறிவுத் திறத்தில் பலவகைத் தரம், படிகள் உள்ளன. தொடுபுலன் முதல் அறிவு. இது மிக அடிப்படையானது. அடுத்தது சுவை அறிவு அதன் பின்னது முகர்தல் உணர்வு; நான்காவது கட்புலன் - ஐந்தாவது செவிப்புலன். ஆறாவது மேற்குறித்து ஐந்து புலன்களையும் தொகுத்தும் பகுத்தும் உணரும் மனம்.

அடுத்த சூத்திரம், வங்க உயிரியல் அறிஞர் ஜகதீஸ் சந்திர போசுக்கு எழுதப் பட்டது!

புல்லும் மரனும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

புல்லும் மரமும் ஒரே ஒரு அறிவுடையன. அது தொடுபுலன். வெட்டினால் கொட்டினால் தாவர இனத்திற்கு கண்ணீரும் செந்நீரும் வரும்; தட்டித் தடவியே மரத்தில் ஏறிவிடக் கூடியது கொடி.

நந்தும் முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(573)

சங்கு, நத்தை முதலியவற்றிற்குத் தொடு புலனும் சுவைப் புலனுமாகிய ஈரறிவு மட்டுமே.

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(574)

எறும்பு, அட்டை முதலியவற்றிற்கு ஊறு, சுவை, நாற்றம் என்னும் மூன்று புலன்கள் மட்டுமே.

நண்டும் தும்பியும் நான் கறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(575)

நண்டு, தும்பி முதலியன ஊறு, சுவை, நாற்றம் ஒளி என்னும் நான்கு புலன்கள் உள்ளன. (இங்கு பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பு என்பது ''இந்த குறிப்பிட்ட இனத்தில் (Species) நண்டு, தும்பி போல பலவகை உயிர்கள் உள்ளன'' என்று பொருள்).

மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(576)

நாற்கால் விலங்கும் பறவையினமும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தறிவுள்ளன.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(577)

அதாவது, அறிவோடு புணர்ந்த - சிந்தனையும் பகுத்தறிவும் செறிந்த - மக்கள் தாமே ஆறறிவுடையவர்கள்; ஆறாவது அறிவாகிய 'மனம்' உடையவர்கள்தாம் மனிதர்கள்.

ஒருசார் விலங்கும் உளமென மொழிப
(578)

ஒரு சில விலங்குகளினங்களும் - குரங்கு, கிளி, யானை முதலியவற்றிற்கு - மனிதனைப் போலவே ஆறறிவுண்டு.

மந்தியினத்திலிருந்து முகிழ்ந்த இனம் மனித இனம் என்று சார்லஸ் டார்வினையும், ஸ்பென்சரையும் போல தொல்காப்பியர் வெளிப்படையாகச் சொல்லவில்லை எனினும், 'Origin of Species' என்ற மாபெரும் அறிவியல் நூலின் வித்துக்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கால இடைவெளியையும் சுமார் ஐயாயிரம் மைல் தொலைவையும் தாண்டி, தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் தோன்றியுள்ளதை நாம் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

இன்னொரு முக்கிய கருத்து' பல இடங்களில் காப்பியர் 'மொழிப', 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே' என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து அறிவியல் பற்றியும் உலகியல் பற்றியும் ஆய்ந்த ஒரு பாரம்பரியம் தொல்காப்பியர் காலத்திலே இருந் திருக்கிறது என்பது தெளிவு.

உற்று நோக்குதலும் (Observation), பகுத்தலும் (Analysis), தொகுத்தலும் (Synthesis) மூன்றும் அறிவியலின் நிலைகள். இந்த முறைப்பாடு அந்தக் காலத்தில் இருந்து வந்திருப்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு.

புறக்கா ழனவே புல்லெனப் படுமே
அகக்கா ழனவே மரமெனப் படுமே
(630)

வெளிப்புறத்தே வயிரம் பாய்ந் துள்ளவை புல்லெனவும், உள்ளே வயிரம் பாய்ந்தவை அனைத்தும் மரமென்றும் பிரித்துள்ளார்கள்.

இவ்வாறு பலவகையாக உயிர்களைப் பிரித்தும் தொகுத்தும் சொல்லும்போது இந்த உயிர்களின் இயக்கத்திற்கு மூல காரணமே என்ன என்று கேள்வி எழுதல் இயல்பு. தொல்காப்பியர் பதிலாவது:

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்'

அதாவது, 'எல்லா வுயிர்க்கும் இன்ப வேட்கையே உந்து விசை'. இன்ப வேட்கை யின்றேல் அனைத்தும் அசைவற்ற 'ஜடம்'. இந்தக் கருத்தை வலி

---

**1995 ஜனவரித் திங்களில் தஞ்சையில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, அன்னைத் தமிழுக்கு அணிகலன் பூட்டிய அரும்பெரும் புலவர்களை நினைவு கூரும் வகையிலும், தண்டமிழுக்கு அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணி குறித்துச் சிறப்புக் கட்டுரைகள், தமிழரசில் இதழுக்கொன்றாக இடம் பெறவிருக்கின்றன. அந்த வகையில், முதல் கட்டுரையாக, ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் குறித்த கட்டுரை இந்த இதழில் சிறப்பிடம் பெறுகின்றது.**

**இன்றைய அறிவியலுக்கு அன்றே அடித்தளம் அமைத்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று, அது உயிரியல் நூலாகவும், மொழியியல் நூலாகவும், வாழ்வியல் நூலாகவும், உளவியல் நூலாகவும் விள்ஙகுகின்றது. அதனை மெய்ப்பிக்கின்றது இக் கட்டுரை:**

● படிக்கும்போது சோர்வை உண்டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே.

—வால்டேர்

புறுத்தி கிரேக்க நாகரீகம் முதல் இன்றைக் காலம் வரை இன்பவியல் சிந்தனையாளர்கள் (hedonist) இருந்து வருகின்றார்கள். இந்தச் சூத்திரத்தைப் போற்றியும் தூற்றியும் கருத்துக்கள் வந்த வண்ணமே இருக்கும். இருக்கட்டும்.

தொல்காப்பியர் காலம் சுமார் கி.மு. முதல் நூற்றாண்டாக இருக்கலாம் என்று முன்னர் சொன்னோம். அந்தக் காலக் கட்டத்தில் நூல் எழுதுவது பற்றி தொல்காப்பியர் போல் ஆழமும் அகலமும் செறிந்த கருத்துக்களை வேறு எந்த மொழியிலாவது, எந்த அறிஞராவது சொல்லியுள்ளார்களா என்பது ஐயமே. நூல் எழுதுதல் என்பது அறிவை நெறிப்படுத்தும் பாங்காகும். பகுத்தறிவும், தொகுப்பறிவும் பண்படுத்தப்படும் களம் நூல். நூல் பற்றிய தொல்காப்பியர் கருத்து நுண்மாண் நுழைபுலம் என்ற வரையறைக்கு எடுத்துக்காட்டு, என்றே சொல்லலாம்.

''உரைபடு நூல் இருவகை நிலைய
முதலும் வழியுமென முதலிய நெறியின''
(639)

அதாவது நூலில் இரண்டுவகை உள்ளன. ஒன்று முதல் நூல்; அடுத்தது வழிநூல்.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''
(640)

அதாவது, வேறு எந்த சிந்தனையும், தொழிலும் இல்லாது, தெளிந்த அறிவுடைய ஒருவர் முனைந்து ஆக்கியது முதல்நூல்.

இன்றைக் காலத்தில் நான்கைந்து ஆண்டுகள் முயன்று ஆராய்ச்சி செய்து 'டாக்டர்' பட்டம் பெறுபவர்களுக்கு இதைவிடச் சிறந்த வரையறை எங்கு கிட்டும்? அவர்களின் Thesis - Original work - அதற்குச் சரியான சொல் முதல் நூல். கருமம் சிதையாத அத்தகைய கருத்தாளர்களுக்குப் பொருத்தமான சொல் முனைவர்கள். (இது இன்று வழக்கில் வந்துவிட்டது).

வழி நூல் நான்கு வகைப்படும்: தொகுத்தல், விரித்தல், தொகுத்து விரிவாக விளக்கல், மொழி பெயர்த்தல் என நான்கு வகை. நூல் எந்த வகையாயினும், முதலுக்கும் முடிவுக்கும் மாறுபாடு இருக்கக் கூடாது; தொகுக்கும் போதும் வகைப் படுத்தும் போதும் காரணமும் விளக்கமும் காட்டி அந்த நூலின் உயிர்ப்போடு (spirit of the work) பொருத்தி நுண்மையாக விளக்குதல் வேண்டும்.

இதை விளக்கும் சூத்திரம் இது:

நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை
காட்டி
உண்ணின்று அகன்ற உரையொடு
பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன்
பண்பே
(156)

நூலுக்கு இதைவிட ஒரு தரமான வரையறை கிடைத்தலரிது. மேலும்

ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை
கொளீஇத்
துணிவோடு நிற்றல்
(650)

வேண்டும் என்கிறார்.

அதாவது ஒரு நூலாசிரியன் ஐயம், குழப்பம் முதலிய நீக்கித் தெளிவான கருத்தைத் துணிவோடு ஆணித்தரமாய்க் கூறல் வேண்டும் என்கிறார்.

ஒரு நூல் எழுதுகையில் கீழ்க்கண்ட குற்றங்களைக் கவனமாக நீக்கிவிடுதல் வேண்டும்.

சிதைவெனப் படுபவை வசையுற நாடிற்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னால் ஒரு பொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனக்கோள்
இன்மை
அன்ன பிறவும் அவற்று விரிவாகும்
(654)

அதாவது, கூறியது கூறல், முன்னுக்குப் பின் முரணாய்க் கூறல், தேவைக்கு அதிகமாய் அல்லது குறைத்துக் கூறல், பயனற்ற பொருள் கூறல், கேட்போருக்கு மயக்கமும் குழப்பமும் வருமாறு கூறல் கேட்போருக்கு 'நாராசமாய்' ஒலிக்கும் இசைக் குறைவு, இழிவான சொற்களைப் பயன்படுத்துதல், மரபுவிட்டுத் தானே ஒன்று புதிதாகப் படைத்துக் கூறல், பிறர் மனம் கொள்ளும்படி உரையாமை முதலிய குறைகள் தவிர்க்கப்பட வேண்டியவை.

இவை தவிர வழிநூலின் கருத்து வெளிப்பாட்டு முறைகளை - அதாவது 'உத்திகளை' - முப்பத்திரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். அவற்றில் சில மட்டும் இங்கு சுட்டுவோம். அதிகார முறையாக தொகுத்துக் கூறல், தன் கோட்பாட்டைக் கூறல், முன் உரைத்த முறைமை யின்று பிறழாமை, முன்னும் பின்னும் சுட்டிக்காட்டல் (reference within), பிற ஆசிரியர் கருத்தைச் சுட்டி உடன்பட்டும் எதிர்ப்பட்டும் கூறல் (external reference), ஒப்பக் கூறல், உய்த்துணர்ந்து கூறல், அறியாது உடம்படல் முதலியன. இன்றைக்கால முனைவர்கள் அனைவரும் அறியவேண்டிய விதிகள் இவை.

உற்று நோக்கினால், கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டிலுக்கும் தொல்காப்பியருக்கும் சில ஒற்றுமைகள் காணலாம். இருவரும் ஒரு நூறு, இரு நூறு ஆண்டு இடைவெளியில் வாழ்ந்தவர்கள். அரிஸ்டாட்டில் ஒரு மெய்ஞ்ஞானி; தொல்காப்பியர் ஒரு இலக்கணி (Grammarian), எனினும் இரு பேரறிஞர்களும் உலகியலையும் அறிவியலையும் உற்று நோக்கி உலகின் அமைப்புப் பற்றியும், உயிரின் படிப்படியான பரிணாமம் பற்றியும், குடும்ப வாழ்க்கை, அரசியல் போக்கு பற்றியும் நூல் வடித்தல் பற்றியும், நாடகவியல் பற்றியும் தெளிவான கருத்துக்களைக் கூறியுள்ளனர். இரு பேரறிஞர்களும் நுண்மாண் நுழைபுலமும், அகன்ற அறிவும் விரிந்த நோக்கும் உடையவர்கள். எனவே வள்ளுவரை சாக்ரடீஸுக்கு ஒப்பிட்டால் தொல்காப்பியரை அரிஸ்டாட்டிலுக்கு ஒப்பிடுதல் பொருந்தும்.

தொல்காப்பியத்தில் காணப்படும் வரையறைகளும் அறிவு கூர்மையான, விளக்கமான சிந்தனையும் எப்படி வந்திருக்க முடியும்? ஒரு திறம்சான்ற அறிஞர் கூட்டம் மண் பற்றியும் விண் பற்றியும் மானுடம் பற்றியும் உரையாடலும் முறையாடலும் நிகழ்த்தி ஒரு பாரம்பரியம் அக்காலத்தில் உருவாக்கியிருக்க வேண்டும்.

தொல்காப்பியம் ஒரு கொம்புத் தேன். அதில் பல மலர்களின் மணம் வீசுகிறதென்றால் பல அழகிய மலர்க் கூட்டம் மலை உச்சியிலும் மலைச்சாரலிலும் நிறைந்து செறிந்து இருந்திருக்க வேண்டும். அந்த மலர்க் கூட்டத்தின் பெரும்பகுதி நம் கண்ணுக்கும் கைக்கும் எட்டவில்லை என்பது உண்மையாயினும் கொம்புத் தேன் மணமே அவை இருந்ததற்குச் சரியான சான்று.

சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# இந்திரா விகாஸ் பத்திரம்

## சிறப்பு அம்சங்கள்

- ★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
- ★ 18.18% சாதாரண வட்டி.
- ★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
- ★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
- ★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
- ★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
- ★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
- ★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
- ★ பரிசாகவும் அளிக்கலாம்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962
மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/944/DIS/94

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!





கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

